


தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர்: 05, இதழ்: 142 குரோதி வருடம், மார்கழி மாதம் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(07.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 06, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




# மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றுங்கள்!

## சட்ட மா அதிபரை கேட்டுக்கொண்டார் ஜனாதிபதி சர்ச்சைக்குரிய வழக்குகள் தொடர்பாகவும் பேச்சு



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சட்டமா அதிபர் உள்ளிட்ட சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்குமிடையிலான சந்திப்பு நேற்று (06) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. » 02 பக்கம்

# இராஜதந்திர செயற்பாடுகளுக்கு விசேட சுற்றறிக்கை



வெளிநாட்டு அரசு, சர்வதேச அமைப்புகள், இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுக்குழுக்கள் மற்றும் வெளிநாட்டிலுள்ள தூதரகங்களுடன் அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் உள்ளக செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தினால் விசேட சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாணப் பிரதான செயலாளர்கள், மாகாண ஆளுநர்களுக்கு இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. » 02 பக்கம்

# பாராளுமன்றம் இன்று கூடுகிறது

பாராளுமன்றக் கூட்டத்தொடர் இன்று (07) இடம்பெறுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். அதற்கமைய இன்று மு.ப. 9.30 மணிமுதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரை மத்திய ஆண்டு நிதிநிலை அறிக்கை 2024 தொடர்பில் ஆளுங்கட்சியால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார். » 02 பக்கம்

# அரிசி மாபியா

## அரசுக்கு எதிராக கம்மன்பில கடும் குற்றச்சாட்டு



கே.சுபானி

"இறக்குமதி செய்யப்படும் அரிசி, கிலோ ஒன்றுக்காக அரசாங்கம் விதித்துள்ள 65 ரூபா வரியால் அதிக இலாபம் ஈட்டப்படுகிறது. இதுவொரு அரிசி மாபியாவாகும். » 02 பக்கம்



# புதிய அரசியலமைப்புக்காக ஐந்தாண்டுகள் காத்திருக்க முடியாது

## பணிகளை உடன் ஆரம்பிக்குமாறு பேராயர் அரசிடம் வேண்டுகோள்



"நாட்டில் தற்போது நடைமுறையிலிருக்கும் அரசியலமைப்பில் ஜனநாயகத்துக்கு எதிராக இருக்கும் பல்வேறு குறைபாடுகளை வெற்றிகொள்வதற்காக ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வெளிப்படைத் தன்மையைப் பாதுகாக்கும் ஒற்றுமையை விருத்திசெய்யும் புதிய... » 02 பக்கம்

# பொலிஸ் தலைமையக சி.சி.ரி.விகள் மாயம்




கொழும்பு கோட்டை பழைய பொலிஸ் தலைமையகத்தில் பொருத்தப்பட்டிருந்த ஏழு சி.சி.ரி.வி. கெமராக்கள் காணாமல்போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் தலைமையகத்தினால் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் தலைமையகம் கொம்பனித் தெருவிலுள்ள பழைய விமானப்படை முகாமில் அமைக்கப்பட்டுள்ளது. » 02 பக்கம்




»03 பக்கம்

# அம்பலாந்தோட்டையில் அரிசிக்கு மக்கள் வரிசை



» 02பக்கம்

"தமிழன்" 14ஆம் திகதி இதழில் விசேட பஞ்சாங்கம்




கமெண்ட் கந்தர்...



திருடனைக் காட்டிக்கொடுக்கிற சிசிரிவியையே திருடியிருக்கிறாங்க.. அதுவும் பொலிஸ் தலைமையகத்திலேயே...

# வடமத்திய மாகாணத்தில் வினாத்தாள் கசிவு

## 11ஆம் தர தவணைப் பரீட்சை ஒத்திவைப்பு

வடமத்திய மாகாணத்தில் தரம் 11க்கான தவணைப் பரீட்சை வினாத்தாள் சமூக ஊடகத்தில் வெளியிடப்பட்டமை உறுதி செய்யப்பட்டதையடுத்து வடமத்திய மாகாணப் பாடசாலைகளில் நேற்று (06) இடம்பெறவிருந்த இறுதி தவணைப் பரீட்சையை உடன் அமுலுக்கு வரும்வகையில் இரத்துச் செய்வதாக வடமத்திய மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன தெரிவித்துள்ளார். அதற்கமைய, நேற்று எட்டு கல்வி வலயங்களுக்குட்பட்ட 30 தொகுதிகளுக்கான 600க்கும் அதிகமான பாடசாலைகளுக்குப் பகிரப்படவிருந்த வினாத்தாள்கள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. » 02 பக்கம்

## உஷ்



**பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் ஏற்பட்டுள்ள உள் நெருக்கடி காரணமாக, அதன் முக்கிய பதவிகளில் மாற்றங்களைச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இதன்படி, அதன் பொதுச் செயலாளர் பதவி மற்றும் தவிசாளர் பதவிக்கு புதியவர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்.**

**கட்சியின் உள்விவகாரங்களை நிர்வகிக்கும் மூன்றாவது சக்திக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது.**

# வாகனங்களிலுள்ள மேலதிக பொருட்களை உடனடியாக அகற்றுக

## சுற்றிவளைப்புகள் நிறுத்தப்படாது என்கிறார் பொலிஸ் பேச்சாளர்

வாகனங்களில் மேலதிகமாக பொருத்தப்பட்டிருக்கும் ஒளிரும் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய சகல மேலதிக பொருட்களையும் உடனடியாக நீக்குவது தொடர்பில் சாரதிகள் உள்ளிட்ட பொறுப்பானவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எக்காரணத்துக்காகவும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட மாட்டாது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு கருத்து த் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலங்களில் பெரும் எண்ணிக்கையிலான வீதி விபத்துக்கள் பதிவாகியிருந்தன. அதனைத் தொடர்ந்து பண்டிகைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இன்று வரையிலும் வாகன சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஐந்து வருட காலப்பகுதியை எடுத்துக் கொண்டால், இந்த ஐந்து வரட காலப்பகுதியில் வாகன விபத்துகளினால் 12, 140 வரையான மரணங்கள் சம்பவித்துள்ளன. அதனடிப்படையில், நாளாந்தம் பாரதூரமான காயங்களை ஏற்படுத்தும் வகையிலான விபத்துகள் அண்ணளவாக 20 வரையில் இடம்பெறுகின்றன. கடந்த ஐந்து வருடங்களில் பாரதூரமான காயங்களுக்குள்ளாகி 90,000 வரையான நபர்கள் விசேட சேவையுடையவர்களாக மாறியுள்ளார்கள்.

இதுபோன்ற விபத்துக்களை குறைத்துக்கொள்வதற்காகவே பொலிஸாரினால் இந்த வாகன சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன்போது, பிரயாணிகள் போக்குவரத்து சேவையில் இடம்பெறும் விபத்துக்களை குறைத்துக்கொள்ள முயற்சிக்கிறோம். வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மேலதிக ஒளிரும் பொருட்களினால் முன்னால் பயணிக்கும் வாகனங்களின் போக்குவரத்தில் சிக்கல் ஏற்படுகிறது. அதுபோன்று, வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மேலதிக பொருட்களினால் முன்னால் பயணங்களுக்கு தடங்கள் ஏற்படலாம். பாதை சரியான தென்படாத சந்தர்ப்பத்தில் விபத்துகள் ஏற்படக் கூடும். அவ்வாறான விபத்துகளை கடந்த காலங்களில் அவதானித்திருக்கிறோம்.

வாகனங்களுக்குள்ளும், வாகனங்களுக்கு வெளியிலும் பொருத்தப்பட்டிருக்கும் அநேகமான மேலதிக பொருட்களினால் பயணிகளுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகமானவையாகும். அதன்காரணமாகவே வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் மேலதிக பொருட்களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எவ்வாறாயினும், தற்போது இடம்பெறும் முதலாம் கட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் மேலதிக பொருட்களை பொருத்தியிருக்கும் வாகனங்களுக்கு தண்டம் விதிக்கவோ அல்லது வழக்கு தொடர்வோ நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது. அந்த மேலதிக பொருட்கள் தொடர்பான அறிவித்தல் மாத்திரமே வழங்கப்படும்.அதன் பின்னர் அவற்றை நீக்குவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்க முடியும்.

அதேபோல், பயணிகள் போக்குவரத்து பஸ்களில் சிவில் பொலிஸாரை கடமைக்கமர்த்தி, சாரதிகள் இழைக்கும் தவறுகளை கண்காணித்து அதுதொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தவும் தேவை ஏற்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். சட்டத்தின் பிரகாரமே இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி விபத்துகளில் இருந்து மக்களை பாதுகாத்து அவர்களின் உயிர்களை பாதுகாப்பதற்காகவே இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்கிறோம். இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட கடந்த டிசம்பர் மாதம் 22 ஆம் திகதியின் பின்னர் தினமொன்றுக்கு பதிவாகும் வீதி விபத்துக்கள் 4 அல்லது 5 ஆக குறைவடைந்துள்ளது.

பாரதூராமான விபத்துக்கு 7- 10 வரையில் குறைவடைந்துள்ளன. அதன் காரணமாக வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும் சட்டத்துக்கு முரணான பொருட்களை நீக்குவதற்கு சகல வாகன சாரதிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களின் உயிரை பாதுகாக்க சாரதிகளும் பொறுப்பேற்க வேண்டும். மேலும், இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த ஒருசில குழுவினர் நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஆனால், எக்காரணத்துக்காகவும் இந்த நடவடிக்கைகளை இடைநிறுத்த மாட்டோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

# இலங்கையின் விளையாட்டு - இளைஞர் விவகார மேம்பாட்டுக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு



இந்திய உயர்ஸ்தானிகர் மற்றும் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோர் நேற்று (06) இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சில் சந்தித்தனர்.

இந்த நிகழ்வில் இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகர, விளையாட்டு பிரதி அமைச்சர் சுகத் திலகரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

விளையாட்டு மேம்பாட்டுக்காக நிபந்தனையற்ற ஒத்துழைப்பை வழங்குவோம் என்றும், கிரிக்கெட் உள்ளிட்ட பிற விளையாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக நாடு முழுவதும் விளையாட்டு மேம்பாட்டு திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவோம் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார்.

# சீனாவில் பதிவாகியுள்ள சுவாச நோய் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

வட சீனாவில், குறிப்பாக குழந்தைகளிடையே சுவாச நோய்களின் அதிகரிப்பைக் குறிக்கும் சமூக ஊடக அறிக்கைகள் குறித்து சுகாதார அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

காய்ச்சல், சுவாச ஒத்திசைவு வைரஸ் (RSV) மற்றும் மனித மெட்டாப்நியூமோவைரஸ் (HMPV) போன்ற பொதுவான வைரஸ்களால் இந்த நோய்கள் ஏற்படுகின்றன என்பதை சீன சுகாதார அதிகாரிகள் உறுதிப்படுத்துகின்றனர். முக்கியமாக, புதிய அல்லது அசாதாரண நோய்க்கிருமிகள் எதுவும் கண்டறியப்படவில்லை.

இந்த நிலைமை எதிர்பாராதது அல்ல என்றும் மற்ற நாடுகளில் காணப்பட்ட முறைகளைப் போன்றது என்றும் உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது. முந்தைய ஆண்டுகளை விட தற்போதைய அலை தீவிரமானது என்றும் வைத்தியசாலைகள் நோயாளர்களின் சுமையை திறம்பட நிர்வகித்து வருவதாகவும் சீன அதிகாரிகள் உறுதியளிக்கின்றனர்.

இலங்கையில், இந்த நிலை குறித்து கவலை கொள்ள எந்த காரணமும் இல்லை. எங்கள் சுகாதார அதிகாரிகள் விழிப்புடன் உள்ளனர்.பொதுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக உலகளாவிய சுகாதார முன்னேற்றங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர் எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

## அரிசி மாபியா...

வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவே இதற்கு வழிசமைத்தவர்'' என பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

''நாட்டரிசியின் நிர்ணய விலை 230 ரூபா என ஜனாதிபதி அடித்துக்கூறினாலும் நான் நேற்று நாட்டரிசியை 240 ரூபாவுக்கே வாங்கினேன். கடந்த போகத்தின்போது சந்தையில் ஒரு கிலோ நாட்டரிசி 170 ரூபாவாக இருந்தது. இதன்போது ஒரு கிலோ அரிசி 170 ரூபாவுக்கு விற்பதற்காக தமக்கும் ஒருதொகை இலாபம் கிடைக்கும் வகையிலேயே விவசாயிகளிடமிருந்து அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியை கொள்வனவு செய்தனர். அதனடிப்படையில், அவர்களுக்கு 05ரூபா இலாபம் கிடைத்திருக்கும். அவ்வாறெனில், தற்போது ஜனாதிபதி கூறும் நிர்ணய விலையான 230 ரூபாவுக்கு அரிசி விற்பனை செய்யப்படுகின்றதென்றால் கட்டாயமாக அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு 65ரூபாவாவது இலாபம் கிடைக்கவேண்டும்.

வரலாற்றில் சந்தையில் அரிசிக்கான விலையை சமமான மட்டத்தில் பேணுவதற்காகவே வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்தார்கள். இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசியின் விலை 210 ரூபா எனின் 230 ரூபாவாக காணப்படும் உள்நாட்டு அரிசியின் விலையை 210 ரூபாவுக்கோ அல்லது அதற்கு அண்மித்த விலைக்கோ விற்பனை செய்யவேண்டும். தேசிய அரிசி உற்பத்தியாளர்களை நாடும் நுகர்வோரை பாதுகாத்து இவ்வாறு அரிசி விலைக்குறைப்பை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. இல்லையேல், நுகர்வோர் உள்நாட்டு அரிசி நுகர்வை கைவிட்டு விட்டு இறக்குமதி அரிசியை கொள்வனவு செய்வர்.

அவ்வாறெனில், இதற்கு மாற்றுத்தீர்வுக்காக முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 45ரூபா என்ற ரீதியில் வரி விதித்து உள்நாட்டு அரிசியின் விலை 230ரூபாவாக நிர்ணய விலையில் பேணியிருக்க வேண்டும். அத்துடன் இறக்குமதி செய்யப்படும் அரிசியை 210 ரூபாவுக்கு விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசியை சந்தைக்கு விடும்போதும் உள்நாட்டு அரிசியும் 210 ரூபாவை அண்மித்த விலைக்கு விற்கப்பட்டிருக்கும். இதன் பின்னர் 45ரூபாவாக இருக்கும் வரியில் மேலும் 30ரூபாவை குறைத்து 15ரூபாவுக்கு கொண்டு வந்திருக்க முடியும். இதன்போது இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசி 180ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். இதன்மூலம் உள்நாட்டு அரிசியும் 180 ரூபாவுக்கு விற்பனையாகும்.

ஆனால், நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு அரசாங்கம் 65 ரூபா என்ற ரீதியில் வரி விதித்தது. இதன்மூலம் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ அரிசியின் விலையும் சந்தையில் தற்போது கிடைக்கப்பெறும் ஒரு கிலோ உள்நாட்டு அரிசியின் விலையும் சரிக்கு சமமாக பேணப்படுகிறது. எனவே, ஒரு கிலோ அரிசியின் மூலம் 65 ரூபாவுக்கும் அதிக இலாபம் கிடைக்கிறது. எனவே இதுவொரு அரிசி மாபியாவாகும். வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவே இதற்கு வழிவகுத்தார். அவரே இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு 65 ரூபா என்ற வரிவிதிப்பு என்ற யோசனையை முன்வைத்தவர். இல்லையேல் தற்போது எம்மால் 180 ரூபாவுக்கோ அல்லது அதற்கும் குறைவான விலையிலோ அரிசியை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்திருக்கும். அரிசிக்கான வரி விதிப்பினூடாக அதிக இலாபத்தை உழைக்கும் அரிசி மாபியாவுக்கு வழிசமைத்த அமைச்சர் வசந்த சமரசிங்கவே நாட்டின் அரிசி மாபியாவின் தளபதி'' இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பொலிஸ் தலைமையக...

பொலிஸ் தலைமையகத்தை இடமாற்றம் செய்ததன் பின்னரே இந்த சி.சி.ரி.வி. கெமராக்கள் காணாமல் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பழைய பொலிஸ் தலைமையகத்தின் 05ஆவது மாடியில் இந்த சி.சி.ரி.வி. கெமராக்கள் பொருத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் பெறுமதி இதுவரையில் கணக்கெடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## இராஜதந்திர....

அந்த சுற்றறிக்கையில், ஜனவரி 01ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கொழும்பில் தங்கியிருக்கும் தூதுவர்கள் மற்றும் தூதுக்குழுக்களின் பிரதானிகளினால் மேற்கொள்ளப்படும் பிரதிக் குழுக்களுக்காக உள்நாட்டு அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை சந்திப்பதற்கு நேரடியாக நேரத்தை ஒதுக்கிக் கொள்ளும் விதம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயற்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்ட இராஜதந்திர செயன்முறைகளுக்கு முரணானது என்பதால் இதன் பின்னர் அவ்வாறான இராஜதந்திர குழு பிரதிநிதிகளுக்கான வேலைத் திட்டங்கள் தொடர்பில் வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சின் பிரிவுக்கு முதலில் அறிவிக்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சின் சம்பந்தப்பட்ட பிரிவினால் உள்நாட்டு அதிகாரிகளினால் அதற்கு பொருத்தமான நேரத்தை ஒதுக்கிக்கொள்ளக் கூடியதாக இருக்குமென்று அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த செயன்முறைகள் ஆளுநர்கள் மற்றும் மாகாண ஆளுநர்களினால் பின்பற்றப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை ஆளுநர்கள் அல்லது மாகாண அமைச்சர்களை சந்திப்பதற்காக இலங்கையில் தங்கியுள்ள தூதுவர்கள் அல்லது தூதுக்குழுக்களின் பிரதானிகளினால் அவர்கள் அல்லது அந்த தூதுக்குழுக்களின் பணிக்குழு சார்பில் நேரடியாக நேரத்தை ஒதுக்கிக் கொள்வதற்கான கோரிக்கையை வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சின் ஒருங்கிணைப்புப் பிரிவுக்கு வழங்கி வைக்க வேண்டும்.

அதேபோன்று, இலங்கைக்கு வரும் தூதுக் குழுக்கள் அல்லது கொழும்பில் தங்கியுள்ள தூதுவர்கள் அல்லது தூதுவர் குழாம் பிரதானிகளினால் ஜனாதிபதி அல்லது பிரதமர் அல்லது அமைச்சர்களை சந்திக்கும்போது, அவ்வாறான சந்திப்புகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான விதங்கள் தொடர்பில் வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அதேபோல், ஐக்கிய நாடுகள் சபை உட்பட தூதரக அலுவலகங்கள் மற்றும் இலங்கைக்கு சுற்றுலாவரும் வெளிநாட்டு தூதுக்குழுக்களில் கீழ்மட்ட பதவிகளில் இருக்கும் அதிகாரிகள், ஜனாதிபதி அல்லது பிரதமரை சந்திப்பதற்கான வசதிகள் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் அந்த சுற்றறிக்கையினூடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், அமைச்சு, நிறுவனங்களினால் இலங்கை வெளிநாட்டுக் கொள்கை மற்றும் உறவுகள் உள்ளிட்ட காரணங்கள் தொடர்பில் எந்தவொரு விதத்திலும் வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சுக்கு எழுத்து பூர்வ அனுமதியின்றி ஊடகங்களுக்கு அறிக்கை வெளியிட முடியாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## மக்கள் எதிர்பார்ப்பை...

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். நீதித்துறை கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்டமா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும் அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் இடமளிக்கக்கூடாது எனவும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இங்கு மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும் சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## வடமத்திய மாகாணத்தில்...

பரீட்சையை தற்காலிகமாக இடைநிறுத்தி வேறு வினாத்தாளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சிறிமேவன் தர்மசேன மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த முறைக்கேடு எவ்வாறு இடம்பெற்றது என்பது தொடர்பில் தேடிப்பார்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

இன்று (நேற்று) இடம்பெறவிருந்த பரீட்சையை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கான செலவை அறவிடவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், இந்த செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் இடமளிக்க முடியாது. இதுபோன்ற முறைக்கேடான செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்றால் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களுக்கு தண்டனையை பெற்றுக்கொள்ள வேண்டும். பரீட்சை வினாத்தாள் வெளியீட்டு பிரச்சினைகள் வட மத்திய மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதுபோன்ற செயற்பாடுகளை தடுப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதாக இன்மையின் காரணமாகவே இன்றும் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கல்வித்துறை வீழ்ச்சிக்கும் இதுபோன்ற செயற்பாடுகள் பெரும் தாக்கத்தை செலுத்தி வருகின்றன. முறையாக இதனுடன் தொடர்புடையவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்பதுடன் இதுதொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவும் அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குவோம்'' என்றார்.

## அம்பலாந்தோட்டையில்...

அம்பலாந்தோட்டை நகரில் சிவப்பு பச்சை அரிசியை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் நுகர்வோருக்கு விநியோகிக்க அம்பலாந்தோட்டை வர்த்தக சங்கம் நேற்று (06) நடவடிக்கை எடுத்திருந்தது.

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒரு கிலோவுக்கு 220 ரூபா என்ற கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில், ஒருவருக்கு ஐந்து கிலோ சிவப்பு பச்சை அரிசி விநியோகிக்கப்பட்டது. இந்த அரிசியை இறக்குமதி செய்வதற்காக மக்கள் காலையிலிருந்து வரிசையில் காத்திருந்துள்ளதுடன், வரையறுக்கப்பட்ட அரிசி தொகையே இதன்போது விநியோகிக்கப்பட்டுள்ளது.

அதன் காரணமாக வரிசையில் காத்திருந்த அநேகமானவர்கள் அரிசி நிறைவடைந்ததன் காரணமாக வெறும் கைகளுடன் வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பலாந்தோட்டை நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் சிவப்பு பச்சை அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதுடன், கடைகளில் ஒரு கிலோ சிவப்பு பச்சை அரிசி 265 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

## பாராளுமன்றம்...

நாளை புதன்கிழமை(08) மு.ப. 9.30 மணிமுதல் மு.ப. 10.00 மணிவரை பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்காக (04 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மு.ப. 10.00 மணிமுதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக (05 கேள்விகள்) நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து மு.ப. 10.30 மணிமுதல் பி.ப. 5.00 மணிவரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டளைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான கட்டளைகள், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழான கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இன்றையதினம் பி.ப. 5.00 மணிமுதல் 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் வியாழக்கிழமை(09) மு.ப. 9.30 முதல் மு.ப. 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் பின்னர் மு.ப. 10.30 மணிமுதல் மு.ப. 11.30 மணிவரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஆறு கட்டளைகள், நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி என்பன விவாதிக்கப்படவுள்ளன. இதனைத் தொடர்ந்து பி.ப. 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு இணக்கம் காணப்பட்டது.

எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான அனுதாபப் பிரேரணைகள் முன்வைக்கப்படவுள்ளன. இதற்கமைய, மறைந்த பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, எச்.நந்தசேன மற்றும் டியூடர் குணசேகர ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளுக்காக அன்றையதினம் மு.ப. 9.30 மணிமுதல் பி.ப. 5.30 மணிவரையான நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர மேலும் தெரிவித்தார்.

## புதிய அரசியலமைப்புக்காக

அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். விரைவில் இந்த அரசியலமைப்பை அரசாங்கம் திருத்தியமைக்குமென எதிர்பார்க்கிறோம். அதற்காக ஐந்து வருடங்கள் காத்திருக்க முடியாது. தற்போதே இந்த செயற்பாட்டுக்கு அரசாங்கம் அடித்தளத்தை இடவேண்டும்'' என்று பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (05) இடம்பெற்றது. அந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டம்" என்பது வீதியிலுள்ள குப்பைகளை சுத்தம் செய்வது மாத்திரமல்ல. சமூகத்தில் பல்வேறு முரண்பாடுகள் இடம்பெற்றன. கடந்த 70 ஆண்டுகள் நாட்டில் சமூகத்தில் ஒழுக்கம், வெளிப்படைத் தன்மை, சமூக அபிவிருத்திக்கான மக்களின் எதிர்பார்ப்பு மிகவும் மழுங்கடிக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக அவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென நம்புகிறோம். அரசாங்கம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலமே ஆகிறது. எழுபது வருடங்களுக்கு முன்பிருந்து பலவீனமாக்கப்பட்ட ஜனநாயக பண்புகள், பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்த மோசடிகள் உள்ளிட்ட பொருத்தமற்ற செயற்பாடுகள் நாட்டின் தலைமைத்துவத்தில் இடம்பெற்றுள்ளன.

எனவே, இதனை ஒரே நேரத்தில் மாற்றியமைத்துவிட முடியாது என்பதை நாங்களும் புரிந்து வைத்துள்ளோம். இருந்தபோதும் இந்த விடயம் தொடர்பில் மிகவும் பலமாக செயற்பட வேண்டும். இந்த அரசாங்கத்துக்கு மக்கள் பெரும்பான்மை பலத்தை வழங்கியிருக்கிறார்கள். எனவே, அதனைப் பயன்படுத்தி தைரியத்துடன் பல்வேறு மாற்றங்களை இந்த அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருந்த தனிநபர்களுக்கு அப்பால் இந்த விவகாரத்தின் பின்னணியிலிருந்த உண்மையை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எங்களுக்கு அவசியமாகும். எந்த காரணத்துக்கான இந்த தாக்குதல் சம்பவங்களை மேற்கொண்டார்கள், எதற்காக இதனை செய்தார்கள், யாரின் ஒத்துழைப்புடன் இதனை செய்தார்கள் என்பது தொடர்பில் பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுக்கப்பட வேண்டும்.

நாட்டில் பல்வேறு கொலைச் சம்பவங்கள், கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. அவை தொடர்பில் முறையான விசாரணைகள் எதுவும் இதுவரையில் இடம்பெறவில்லை. அதன் காரணமாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் உள்ளடங்களாக கொலைச் சம்பவங்கள், ஆட்கடத்தல், ஜனநாயக விரோத செயற்பாடுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு அவசியமாக பொறிமுறையை உடனடியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்று, நீதித்துறை சுயாதீனமாக்கப்பட வேண்டும். இருந்தபோதும் அதற்கு அவசியமான மாற்றங்களை மேற்கொள்வதற்கு அரசியலமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பில் ஜனநாயகத்துக்கு எதிராக இருக்கும் பல்வேறு குறைபாடுகளை வெற்றிக்கொள்வதற்காக ஜனநாயகத்தை பாதுகாக்கும் வெளிப்படைத் தன்மையை பாதுகாக்கும் ஒற்றுமையை விருத்திச் செய்யும் புதிய அரசியலமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். விரைவில் இந்த அரசியலமைப்பை அரசாங்கம் திருத்தியமைக்குமென எதிர்பார்க்கிறோம். அதற்காக ஐந்து வருடங்கள் காத்திருக்க முடியாது. தற்போதே இந்த செயற்பாட்டுக்கு அடித்தளத்தை இடவேண்டும்'' என்றார்.

# அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் – உறுப்பினர்கள் நியமனம்



ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக நிமல் ஆர். ரணவக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தின் ஏனைய உறுப்பினர்களாக பேராசிரியர் ஆர். எம்.டபிள்யூ.ராஜபக்ஷ, பேராசிரியர் ஜோசப் யோகராஜா மற்றும் லரீனா அப்துல் ஹக் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான நியமனக் கடிதங்கள் நேற்று (06) ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன.

# 2015 முதல் காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் பகிரப்பட்ட காணிகள் தொடர்பில் விசாரணை

## காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க

2015ஆம் ஆண்டு முதல் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்ட காணி தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

விசாரணையின் பின்னர் தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதியமைச்சர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காணி சீர்திருத்த ஆணைக்குழு மூலம் தொழிற்சாலைகள் மற்றும் விவசாயத்துக்காக நிலங்கள் விடுவிக்கப்படுகின்றன. ஆனால் சமீப காலமாக பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட காணிகள் தொடர்பில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 2015ஆம் ஆண்டு முதல் காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் யாருக்கு காணி வழங்கப்பட்டுள்ளது, என்ன திட்டங்களுக்கு, எந்த அடிப்படையில் என்பது தொடர்பில் விசாரணை முடியும்வரை காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் காணி வழங்கப்படுவது நிறுத்தப்படும்.

கூடிய விரைவில் இந்த விசாரணையை நடத்தி இந்த காணிகள் யாருக்கு வழங்கப்பட்டுள்ளது, இதில் ஊழல் நடந்துள்ளதா என்பதைக் கண்டுபிடிப்போம் என்று நம்புகிறோம்" எனத் தெரிவித்தார்.

# அரசியல் கைதிகளின் பிரச்சினையை சர்வதேச ரீதியாக கொண்டுசெல்ல வேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து!



(பு.கஜிந்தன்)

''கிளீன் ஸ்ரீலங்கா என்ற விடயத்தில் தனியே, சுத்தம், சுகாதாரத்தை முன்னிறுத்தி வீதிகளை தூய்மைப்படுத்தல் என்பவற்றுடன் இந்த அரசின் நோக்கங்கள் இலக்குகள் அமைந்து விடக்கூடாது. எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது ஒரு சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும்'' என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சி.சிவகஜன் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு முன்னால் முன்னெடுக்கப்பட்ட கையெழுத்து வேட்டையின்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,''இலங்கை அரசப்படைகளினால் இலங்கையின் இறுதி யுத்த காலத்தில் கைது செய்யப்பட்டு அல்லது அதற்குப் பின்னரான காலப்பகுதியில் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்தும் சிறைகளில் வாடிக்கொண்டி ருக்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி போராளிகள் நலன்புரிச் சங்கத்தினர் முன்னெடுத்துவரும் கையெழுத்து வேட்டைக்கு வலுச்சேர்க்கும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் தமது ஆதரவை வழங்கியுள்ளது.

2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் 162ஆக இருந்த தமிழ் அரசியல் கைதிகளில், தற்போது 10 பேர் தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். அவர்களில் எட்டுப் பேர் மீது இலங்கை நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் இருவர் இதுவரை வழக்கு விசாரணைகள் இல்லாமல் தொடர்ந்தும் சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றனர்.

கிளீன் ஸ்ரீலங்கா என்ற வேலைத்திட்டத்தை இந்த அரசு நாட்டில் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த அரசின் கரங்களானது, ஒரு இனத்தின் கரங்களில் வலிந்து திணித்த போரின் காரணமாக ஏற்பட்ட இரத்தக்கறை படிந்து காணப்படுகின்றது. அதனை அந்த அரசு சுத்தம் செய்வதற்கு முன் வரவேண்டும் என மாணவர்களாக நாம் வேண்டி நிற்கின்றோம்.

இனப்படுகொலை போர் குற்றத்துக்கு இந்த அரசு பொறுப்புக் கூற வேண்டும். இந்த இனப்படுகொலை போருடன் தொடர்புபட்டவர்கள் தான் இந்த அரசியல் கைதிகள். அவர்களை வெறுமனே அரசியல் கைதிகள் என்று அழைப்பதற்கு பதிலாக, சர்வதேச பன்னாட்டு சமவாயங்களுக்கு அடிப்படையிலே அவர்களை நாங்கள் போர் கைதிகள் என்று தான் அழைக்க வேண்டும். எம்மீது வலிந்து திணிக்கப்பட்ட இந்த போர் தொடர்பாக, சர்வதேச நாடுகளுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினை என்பது ஒரு சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டும். அவ்வாறு இது சர்வதேச பிரச்சினையாக மாற்றப்பட வேண்டுமேயானால் சர்வதேச ஜெனீவா சமவாயங்களுக்கு உட்பட்டு போர் கைதிகள் என்ற சொல்லாடல் தான் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், மாறாக ஒரு உள்நாட்டில் நடைபெறக்கூடிய குற்றம் என்ற வகையில், அவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கையாளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள் என்ற ஒரு வருத்தமான செய்தியையும் இந்த நேரத்தில் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம்'' என்றார்.

# பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வின் பின்னரான தேநீர் விருந்துக்கான செலவு குறித்து தெளிவுபடுத்தல்



10ஆவது பாராளுமன்றத்தின் முதல் நாள் அமர்வுக்கு பின்னரான தேநீர் விருந்துக்கான செலவு தொடர்பில் வெளியான செய்தி குறித்து பாராளுமன்றம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்தின் உண்மையான செலவு" என்ற தலைப்பில் 2024.12.29ஆம் திகதி சிங்கள ஊடகமொன்றில் வெளியான செய்தி தொடர்பில் கீழ்வரும் விடயங்களைக் குறிப்பிட விரும்புகின்றோம்.

பாராளுமன்ற செலவுத் தலைப்பின் கீழ் சம்பிரதாயமாக நடத்தப்படும் நிகழ்வுகள் மற்றும் தேநீர் விருந்துபசாரத்துக்காக ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வில் 287,340 ரூபாவும் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரத்துக்கு 339,628.55 ரூபாவும் செலவு செய்யப்பட்டிருப்பதாக குறித்த ஊடகச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2020.08.20ஆம் திகதியும் பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஆரம்பம் 2024.11.21ஆம் திகதியும் இடம்பெற்றன.

இதற்கமைய, ஒன்பதாவது பாராளுமன்றம் மற்றும் பத்தாவது பாராளுமன்றத்தின் முதல்நாள் அமர்வின் பின்னர் நடத்தப்பட்ட தேநீர் விருந்துபசாரங்களுக்கான செலவுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களினால் வேறுபடுகின்றன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

ஒன்பதாவது மற்றும் பத்தாவது பாராளுமன்றங்களின் முதல்நாள் அமர்வுகளுக்கிடையில் 04 வருட கால இடைவெளி காணப்படுகின்றது. இக்கால இடைவெளியில் சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கங்கள், விருந்துபசாரத்துக்கான செலவுகள் உள்ளிட்ட ஏனைய செலவினங்கள் அதிகரிப்பதற்குப் பிரதான காரணமாக அமைந்தது. இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவினால் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்தமையால் உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கான செலவுகள் 2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2024ஆம் ஆண்டில் அண்ணளவாக 100% இனால் அதிகரித்துள்ளன என்பதைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

மேலும், இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமன்றி, இராஜதந்திரிகள், அமைச்சுகளின் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகள், அழைக்கப்பட்ட விருந்தினர்கள் மற்றும் பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

# வீதிகளில் திரியும் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

## வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அதிரடி

வடக்கு மாகாணத்தில் வீதிகளில் சுற்றித் திரியும் கட்டாக்காலிகளின் உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு, அதனையும் பொருட்படுத்தாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் சீ.ஏ.தனபால தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் உள்ள வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டங்கள் அதிகமாக காணப்படுவதால் வீதி விபத்துகள் ஏற்படுவதுடன், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படக்கூடிய சூழ்நிலையும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு இன்று(07)முதல் ஒரு வாரத்துக்கு வட மாகாணம் முழுவதும் கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு முதற்கட்ட நடவடிக்கையாக எச்சரிக்கை விடுக்கப்படவுள்ளது.

அவ்வாறு எச்சரிக்கை செய்யப்பட்டும் கருத்தில் கொள்ளாத கட்டாக்காலி மாடுகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.



தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 07ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# ஜனநாயகம் பேசுவது யார்?

‘‘கடந்த அரசுகள் போல் நாமும் ஊடகங்களை அச்சுறுத்தி அடக்கமாட்டோம். ஊடகங்கள் நடுநிலையுடன் சுதந்திரமாகச் செய்திகளை வெளியிட முழு உரிமையுண்டு. அதனை எவரும் தடுத்து நிறுத்த முடியாது” - இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அமைச்சரவையின் பேச்சாளர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கத்தின் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் மீது திட்டமிட்டுச் சேறுபூசும் நடவடிக்கைகளில் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீரவுக்குச் சொந்தமான சிங்களப் பத்திரிகையொன்று ஈடுபட்டுள்ளதாகவும் இந்தப் பத்திரிகைக்கெதிராக சட்ட நடவடிக்கையெடுக்க அரசாங்கம் தயாராகியுள்ளதாகவும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ள அதே சமயத்தில்தான் இப்படி ஊடக சுதந்திரம் குறித்தும் அவரின் உருத்திராட்சப் பூனை பாணியிலான உபதேசமும் வெளிப்பட்டுள்ளது.

“கடந்த ஆட்சிக் காலங்களில் படுகொலை செய்யப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம். நீதியை எதிர்பார்த்து அந்த ஊடகவியலாளர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் வலி, வேதனை எமக்குத் தெரியும். எனவே, அவர்களின் நீதிக்கான வேண்டுதலை நாம் நிறைவேற்றியே தீருவோம். ஊடகங்களை அடக்கிக்கொண்டு ஆட்சியை முன்னெடுக்க முடியாது. அவ்வாறு செய்த அரசுகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும்” - என்று அவர் கூறியிருக்கின்றார்.

காலாகாலமாக அதிகாரத்திலிருந்த அரசுகள் சார்பில் அச்சமயத்தில் கூறப்பட்ட உறுதிமொழியைத்தான் தேசிய மக்கள் சக்தியின் அரசும் இப்போது கூறுகிறது.

முன்னைய அரசுகள் செய்வதாகக் கூறி, செய்யாமல் சென்ற விடயத்தைத்தான் இப்போது தான் செய்யப்போவதாக இந்த அரசும் கூறுகிறது.

கடந்த காலத்தில் வன்முறைகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள் தான். பெரும்பாலும் அவர்களுக்கெதிரான வன்முறைகளின் சூத்திரதாரிகளாக அரச தரப்பினரே சுட்டப்படுகின்றனர்; சந்தேகிக்கப்படுகின்றனர்.

ஆனால், தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விடயத்தில் தென்னிலங்கை ஆட்சிபீடம், நீதி, நியாயமான - காத்திரமான - நேர்மையான - உண்மையான - விசாரணைகளை நடத்தவே இல்லை என்பதுதான் கடந்த கால அனுபவம்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்களான லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்கள் விடயத்தில் விசாரணை ஆரம்ப கட்டத்தையாவது தாண்டியிருக்கின்றது. ஆனால், பெரிதும் பாதிக்கப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் விடயத்தில் எந்த நடவடிக்கைகளுமே முன்னெடுக்கப்படவில்லை. யாருமே சட்டத்தின் முன் நிறுத்தப்படவுமில்லை - தண்டிக்கப்படவுமில்லை.

தராக்கி சிவராம் விடயத்தில் மாத்திரம் உலகத்தை சமாளிப்பதற்காக மூடிமறைப்பு விசாரணையொன்று நடைபெற்று முடிந்திருக்கிறது, அவ்வளவே.

இப்போது ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் தொடர்பாக நீதி, நியாயமான விசாரணைகளை முன்னெடுப்போம் என்று கூறும் இந்த அரசின் கூற்றாவது நிறைவேற்றப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டியுள்ளது.

தற்போதைய நாட்டின் நிலைமையை எடுத்துக்கொண்டால் அரச ஊடகங்களைத் தவிர, ஏனைய ஊடகங்கள் எவையும் அரசு மீதான விமர்சனங்களையே முன்வைத்து வருகின்றன. அரிசித்தட்டுப்பாடு, விலங்குகள் பிரச்சினை, கிளீன் ஸ்ரீலங்கா விடயத்தில் வரும் விமர்சனங்கள் என்று பலதரப்பட்ட விமர்சனங்கள் ஊடகங்களால் முன்வைக்கப்படுகின்றன. இந்த விமர்சனங்களின் உண்மைத்தன்மை, அவற்றில் பொதிந்துள்ள விடயங்கள் தொடர்பில் கவனஞ்செலுத்தவேண்டிய அரசு, அந்தச் செய்திகளை வெளியிடும் ஊடகங்களைச் சாடுவது நியாயமானதல்ல.

தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சியைப் பிடித்துள்ள ஜே.வி.பியானது, கடந்த போர்க் காலத்தில் தமிழ் ஊடகவியலாளர்கள் செய்திகளைச் சேகரிக்க தலைமை அலுவலகத்துக்கு வரக்கூடாதென்று உத்தரவிட்ட கட்சியே என்பதை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். அதேபோல, ஜே .வி.பியின் செய்திகளைச் சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் அவர்களால் நையப்புடைக்கப்பட்டார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டும். இப்போது ஜனநாயகம், ஊடக தர்மம் பேசும் ஜே.வி.பி. அன்று அப்படித்தான் நடந்துகொண்டது. இந்த வரலாறு அமைச்சர் நலிந்தவுக்குத் தெரியாவிடின் அவர் யாரிடமிருந்தாவது கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பூனை, தான் கண்ணை மூடினால் உலகமே இருண்டதென்று நினைக்குமாம். அப்படியாயிருக்கிறது ஜே.வி.பியின் கதை.



# மனதில் உறுதி வேண்டும்!

**எஸ். ராஜசேகரன்**

நீச்சலடிக்கத் தெரிந்தவர்கள் ஆற்றுக்குள் போய் வரலாம். ஆனால், வாழ்க்கையில் எதிர்நீச்சலடிக்கும் திறனிருந்தால் வரலாற்றில் கூட இடம் பெறலாம். வாழ்க்கையில் முன்னேற நினைக்கும் மனிதர்களுக்கு ஊக்கம் என்பது இன்றியமையாததாகும்.

ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் செய்கின்ற எல்லாச் செயல்களும் வெற்றிகரமாக நடைபெறுகின்றன. ஆனால், இன்றைய மனிதர்களில் எத்தனையோ பேர் தங்களிடம் தகுதிகளும் திறமைகளும் இருந்தும் ஊக்கமின்மையாலும் தாழ்வு மனப்பான்மையாலும் பின்தங்கி விடுகின்றனர். தாழ்வுமனப்பான்மை என்பது புற்றுநோயை விடக் கொடியதாகும்.

மனிதர்கள் உருவத்தாலும் நிறத்தாலும் படிப்பாலும் பொருளாதாரத்தாலும் தாழ்வு மனப்பான்மை கொண்டு தங்களது தனித்திறமைகளைப் பற்றித் தாங்களே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஒருவர் தன்னைப்பற்றி குறைத்து மதிப்பிட்டுக்கொண்டால் மற்றவர்கள் எவ்வாறு அவரை மதிப்பிடுவார்கள்?

உருவத்துக்கும் செயலுக்கும் தொடர்பு கிடையாது. சிறிய அங்குசம்தான் பெரிய யானையைக் கட்டுப்படுத்துகிறது; சிறிய மெழுகுவர்த்திதான் பெரிய இருளை அகற்றுகிறது; சிறிய உளி தான் பெரிய மலையை உடைக்கப் பயன்படுகிறது.

தங்கம் விலை அதிகம் தான். தகரம் விலை மலிவு தான். ஆனால், தகரத்தைக் கொண்டு செய்ய வேண்டியதை தங்கத்தைக் கொண்டு செய்ய முடியாது. அதனால் தகரமும் மட்டமில்லை, தங்கமும் உயர்ந்ததில்லை.

நம்மில் பலபேர் படிப்பில் சிறந்தவர்களாக இருக்கலாம்; சிலர் விளையாட்டில் திறமைசாலிகளாக இருக்கலாம்; சிலர் இசை, நடனம் போன்ற கலைகளில் திறமை உள்ளவர்களாக இருக்கலாம். கண்டிப்பாக ஒவ்வொருவரிடமும் ஏதாவது ஒரு தனித்திறமை ஒளிந்து கொண்டிருக்கும். அதை வெளிக் கொண்டு வருபவர்களுக்குத்தான் இந்த வானமும் வசப்படும்.

சில நபர்கள் தமக்கு மட்டுமே கஷ்டங்களும் சோதனைகளும் இருப்பதாகப் புலம்புகிறார்கள். ஒவ்வொரு நபருக்கும் அவர்களால் சமாளிக்கக்கூடிய அளவுக்குத்தான் பிரச்சினைகள் வந்து சேரும். இதுவே இயற்கையின் நியதி.

நம்மால் முடியாதென்று நாம் நினைக்கும் விஷயத்தை இந்த உலகத்தில் வேறு யாரோ செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். எந்தச் செயலையும் செய்வதற்குத் தயங்காதீர்கள். அதுபோல, எந்தச் செயலையும் தள்ளிப்போடாதீர்கள். திட்டமிட்டுச் செயல்களைச் செய்யுங்கள். அதோடு மட்டுமல்லாமல், அதனைத் துணிச்சலோடும் செய்யுங்கள். ஏனெனில், துணிந்தவர்களுக்கு என்றுமே தோல்வி இல்லை.

பூட்டுத் தயாரிக்கும் கம்பெனிகளில் பூட்டு மட்டுமே தயாரிப்பது கிடையாது. பூட்டைத் திறப்பதற்கு சாவியையும் சேர்த்துத்தான் தயாரிக்கிறார்கள். அதுபோலத்தான் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளுடனேயே உருவாகின்றன. எப்போதும் உங்களை மற்றவர்களோடு ஒப்பிடாதீர்கள். அது உங்களுக்கு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும்.

உயரம் குறைவாக உள்ளவர்கள் தங்களது உயரத்தை நினைத்துக் கவலைப்படவேண்டியதில்லை. அத்தனை மனிதர்களையும் தலை நிமிர்ந்து பார்த்துப் பேச நம்மால் மட்டும் தான் முடியுமென்று பெருமைப்பட வேண்டும். நாம் எவ்வளவு உயரம் என்பது முக்கியமல்ல, வாழ்க்கையில் நாம் எவ்வளவு உயர்கிறோம் என்பதுதான் முக்கியம்.

சில மனிதர்கள் மற்றவர்கள் தம்மைப் பாராட்டவில்லையென்றும் வேறு சிலர் தம்முடைய செயற்பாடுகளை மற்றவர்கள் எப்போதும் குறை சொல்லிக்கொண்டேயிருக்கிறார்கள் என்றும் கவலைப்படுகின்றனர். அவர்கள் குறை சொல்கிறார்கள் என்று எதிலும் பின்தங்கிவிடக்கூடாது. முன்னேறிச் சென்று திரும்பிப் பாருங்கள். அவர்கள் அதே இடத்தில் இருந்துகொண்டு வேறொரு நபரைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருப்பார்கள். நமது முதுகுக்குப் பின்னால் குறை சொல்பவர்களைக் கண்டு நாம் கவலைப்படக் கூடாது. அவர்களை விட இரண்டு அடி தூரம் நாம் முன்னால் தான் இருக்கிறோமென்று நினைத்துப் பெருமைப்பட வேண்டும்.

பொதுவாகவே வளரும் வரையில் காதுகளை மூடிக்கொள்ள வேண்டும். வளர்ந்த பிறகு வாயை மூடிக்கொள்ள வேண்டும். வளர்ச்சி என்பது நீங்கள் நேற்று இருந்த நிலையை விட இன்று இருக்கும் நிலை உயர்ந்திருப்பதுதான். அதுதான் உங்கள் வெற்றி.

உங்கள் உடல் மொழி உங்கள் தன்னம்பிக்கையை வெளிப்படுத்தக் கூடியதென்பதால் எப்போதும் நிமிர்ந்து நின்று பேசுங்கள். நேருக்கு நேராக கண்களைப் பார்த்துப் புன்சிரிப்புடன் பேசுங்கள்.

செய்ய வேண்டிய செயல்களைச் சரியான நேரத்தில் செய்து முடியுங்கள். தவறாகச் செய்துவிட்டு அதற்காக வருத்தம் தெரிவிப்பதை விட, அதனைத் திட்டமிட்டு முன்கூட்டியே சிறப்பாகச் செய்து முடித்தால்தான் மற்றவர்கள் உங்களை உயர்வாகப் பார்ப்பார்கள்.

இந்தச் செயல் என்னால் முடியாது, கடினமாக உள்ளது என்ற எதிர்மறையான வார்த்தைகளை எப்போதும் பயன்படுத்தாதீர்கள். அப்படிப்பட்ட எண்ணங்களையும் வளர்த்துக்கொள்ளாதீர்கள். அடைவது மட்டுமே வாழ்க்கை அல்ல. இழப்பதும் தான். துளிர்ப்பது போலவே இலைகளும் மலர்களும் உதிர்வதும் கூட தாவர வர்க்கத்தில் ஒரு பரிணாம வளர்ச்சியே.

உங்களுக்கான இலக்குகளை நீங்களே முடிவு செய்யுங்கள். அதற்கான பயணத்தை இன்றே தொடங்குங்கள். கை கொடுப்பவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். தட்டி விடுபவர்களைப் பார்த்து புன்னகை செய்யுங்கள். இயக்கமே இதயத்துடிப்பென நினைவில் கொள்ளுங்கள். மாற்றம் வேண்டினும் ஏற்றம் வேண்டினும் உங்களில் இருந்தே தொடங்குங்கள். உங்களை நீங்கள் சரி செய்து கொண்டே வாருங்கள். உலகம் ஒருநாள் உங்களைப் போல வாழ ஆசைப்படும். உலகம் ஒரு நாள் உங்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளும். உலகம் ஒரு நாள் உங்களைப் பாடமாக ஏற்கும். ஒரு நாள் உலகம் உங்கள் வழி நடக்கும்.

***நன்றி - தினமணி***

# 2025ஐ வரவேற்கும் பான் ஏஷியா வங்கி



பான் ஏஷியா வங்கித் தலைவர், பிரதம நிறைவேற்று அதிகாரி, கூட்டுத்தாபன முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் 2025 ஆம் ஆண்டுக்கான முதல் வேலை நாளான ஜனவரி 01 ஆம் திகதி கொள்ளுப்பிட்டியிலுள்ள வங்கியின் தலைமை அலுவலகத்தில் புத்தாண்டை சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

பான் ஏஷியா வங்கியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி நளீன் எதிரிசிங்க, கடந்த வருடத்தில் ஊழியர்கள் மற்றும் கூட்டாண்மை முகாமைத்துவக் குழுவினரால் வெளிப்படுத்தப்பட்ட கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புக்கு ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தார். ஒட்டுமொத்த சொத்துகளின் அடிப்படையில் ஒரு பெரிய வங்கியாக மாறுவதற்கான அதன் மூலோபாய இலக்கை நெருங்கிச் செல்வதில் இந்த அர்ப்பணிப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. தொடர்ச்சியான வெற்றிக்கான அடித்தளமாக குழுப்பணி, புத்தாக்கம் மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார்.

பான் ஏஷியா வங்கியின் தலைவர் அரவிந்த பெரேரா, வங்கியின் உத்வேகத்தை வளர்ப்பதில் ஊழியர்களின் நல்வாழ்வு முக்கிய காரணியாக விளங்குவதாகவும் அதனடிப்படையில் ஊழியர்கள் தங்கள் சிறந்த செயற்றிறனை வழங்குவதாகவும் குறிப்பிட்டார். வங்கியின் முன்னேற்றத்துக்கு ஊழியர்களின் உன்னிப்பும் உழைப்பும் ஈடுபாடும் மிகப் பெரிய உந்து சக்திகளாக விளங்கவேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். சகல ஊழியர்களும் ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதன் மூலம் மட்டுமே வங்கியின் வளர்ச்சி தடையின்றி முன்செல்லுமெனவும் தெரிவித்தார்.

வங்கியின் இத்தகைய ஒன்றுபட்ட செயற்பாடுகள், அதன் வளர்ச்சி, பணியாளர் நல்வாழ்வு ஆகியவற்றுடன் வாடிக்கையாளர்களுக்கு விதிவிலக்கான சேவையை வழங்குவதை தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு வங்கி அதன் தொலைநோக்கு சிறந்த ஒத்துழைப்பு மற்றும் கலாசாரத்தை வளர்ப்பதில் உறுதியாக உள்ளது என்பது தெளிவாகின்றது.

# இன்றைய நாளில்...

- **1932 – ஜெர்மனியில் பிறந்த சுவிட்ஸர்லாந்து இயற்பியலாளர் எல்பர்ட் ஐன்ஸ்டைன் அமெரிக்காவுக்கு வருவதற்கு நுழைவாணை வழங்கப்பட்டது.**
- **1936 – அவுஸ்திரேலியாவின் துடுப் பாட்ட வீரர் யாக் பிங்கிள்ட்டன் அடுத் தடுத்த நான்கு தேர்வுப் போட்டிகளில் சதம் எடுத்து சாதனை புரிந்தார்.**
- **1972 – அப்பலோ திட்டத்தின் கடைசி விண்கலம் ‘அப்பலோ 17’ சந்திரனை நோக்கி ஏவப்பட்டது. இக்கலத்தின் விண்வெளி வீரர்கள் பூமியை விட்டு வெளியேறும்போது தி புளூ மார்பிள் புகைப்படத்தை எடுத்தனர்.**
- **1982 – அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்தில் முதல் தடவையாக ஊசிமருந்து ஏற்றப்பட்டு மரணதண் டனை நிறைவேற்றப்பட்டது.**
- **1988 – ஆர்மீனியாவில் 6.8 அளவு நிலநடுக்கத்தில் ஏற்பட்டதில் 25,000 பேர் கொல்லப்பட்டு 4,00,000 பேர் வீடுகளை இழந்தனர்.**
- **1988 – யசிர் அரபாத் இஸ்ரேலைத் தனிநாடாக அங்கீகரித்தார்.**
- **1995 – கலிலியோ விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டு 6 ஆண்டுகளின் பின்னர் வியாழனை அடைந்தது.**
- **2015 – ஜப்பானின் விண்கலம் அக்காத்சுக்கி வெள்ளிக் கோளின் சுற்றுவட்டத்தை அடைந்தது.**
- **2017 – அவுஸ்திரேலியாவில் ஒருபால் திருமணம் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.**

# நக்கல் நமசிவாயம்

***சீனா வைரஸ் தொற்று இருக்கிறபடியால் அங்க போகும்போது ஜனாதிபதி ஐயா மாஸ்க் போட்டுப் போறது நல்லது பாருங்கோ...***



# சர்வமதத் தலைவர்களைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றார் சபாநாயகர்







சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்கிரமரத்ன ஸ்ரீ தலதாமாளிகைக்கு அண்மையில் (04) சென்று வழிபட்டு ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். இதன்போது தியவடன நிலமே நிலங்கதேல பண்டாரவும் இணைந்துகொண்டார்.

இதனைத் தொடர்ந்து மல்வத்து மகா விகாரைக்குச் சென்ற சபாநாயகர் மல்வத்துபீட மகாநாயக்க தேரர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கள தேரரைச் சந்தித்து ஆசிகளைப் பெற்றுக்கொண்டார். இதன் பின்னர் சபாநாயகர் கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் நேற்று முன்தினம் (05) சபாநாயகர் தெவட்டகஹ பள்ளிவாசலுக்குச் சென்று மதத் தலைவர்களைச் சந்தித்ததுடன், அதனைத் தொடர்ந்து கொழும்பு மறை மாவட்ட ஆயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையையும் சந்தித்து ஆசிபெற்றார்.

# சுண்ணக்கல் ஏற்றிவந்த பார ஊர்தி விடயத்தில் இளங்குமரன் எம்.பி. செயற்பட்டது சரியானதே

## கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன்

*பு.கஜிந்தன்*

சுண்ணக்கல் ஏற்றிவந்த பார ஊர்தி விடயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் செயற்பட்டமை சிறந்த நடவடிக்கையாகும். கல் அகழ்வு விடயத்தில் அதிகாரிகளின் அசமந்த போக்கு காணப்படுவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.



யாழ்ப்பாணம் சரசாலை பகுதியில் நேற்று முன்தினம் (05) கல் அகழ்ந்த பகுதிகளை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒரு லொறியில் சுண்ணக்கல் ஏற்றிச் சென்றபோது, பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வழிமறித்து அந்த லொறியை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார். இந்த விடயமானது கடந்த சில தினங்களாக ஊடகங்களில் பரவலாக பேசப்பட்டது. இந்நிலையில் நீங்கள் செய்தது தவறு, குற்றச்செயல்கள் இடம்பெறும்போது அவற்றினை பொலிஸாருக்கு தெரியப்படுத்தி, அவர்கள் மூலமாக வைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என நான் இளங்குமரனுக்கு அறிவுறுத்தினேன்.

ஆனால் தற்போது பார்க்கும் பொழுது இளங்குமரன் செய்தது சரியான நடவடிக்கை என்று தோன்றுகிறது. இளங்குமரனின் இந்த வேலையால் அனைவரும் கலக்கமடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. வெட்ட வெட்ட பூதம் கிளம்பியது போல இன்று பல பிரச்சினைகள் வெளிவருகின்றன.

சரசாலை பகுதியில் சட்டரீதியான வேலைகள், சட்ட ரீதியற்ற வேலைகள் இடம்பெறுகின்றன. தனியார் காணிகளில் அகழ்வுகள் இடம்பெறுகின்றன. அதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கு அருகாமையில் அரச காணிகள் உள்ளன. அதில் அனுமதி பெறப்படாமல் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் வேளையில் சட்டவிரோதமான செயற்பாடுகள் இடம்பெறுகின்றமையை ஊகித்துக் கொள்ள முடிகின்றது.

இந்த விடயத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் இந்த தொழிலை புரிகின்ற வியாபாரிகளோ, தொழில்புரிகின்ற ஊழியர்களோ அல்ல. மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலர், கிராம செயலர், புவிசரிதவியல் திணைக்கள அதிகாரிகள் ஆகியோரே இதற்கு பொறுப்புக்கூற வேண்டும். அரசு அதிகாரிகள் சரியாக செயற்படவில்லை என்று குற்றச்சாட்டை முன்வைக்கிறேன். அத்துடன் இது குறித்து விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கவும் விளைகிறேன்.

சரசாலையில் உள்ள சுண்ணக்கல்லுக்கும் இளங்குமரன் எம்.பி. மறித்த லொறியில் இருந்த சுண்ணக்கல்லுக்கும் இடையே வித்தியாசம் இருக்கின்றது.

அப்படியாயின் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் இந்த திருட்டுத் தொழில் இடம்பெறுகின்றதா என்று கேள்வி எழுகின்றது.

ஒரு சிலர் வந்து, இவ்வாறான நடவடிக்கைகள் எடுப்பதால் தொழில் இல்லாமல் போகின்றது, வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது, மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றார்கள். ஆனால் இவ்வாறான அகழ்வுகள் மூலமாக ஏற்படுகின்ற அனர்த்தங்களுக்கு பல பரம்பரைகள் பலியாகும் என்ற விடயத்தை நாங்கள் மறந்து விடக்கூடாது. ஒரு சில வியாபாரிகளின் பணப் பசியை போக்கும் தேவைக்காக இந்த செயற்பாடுகள் இடம்பெறுமாக இருந்தால் எமது அரசாங்கத்தில் இது தடுத்து நிறுத்தப்படும்" – என்றார்.

# இளங்குமரன் எம்.பி. சட்டத்தை கையில் எடுக்க முடியாது

## யாழ். தொழிலதிபர் குற்றச்சாட்டு



தமது வர்த்தக நிறுவனம் சட்டரீதியாகவே சுண்ணக்கல் வியாபாரத்தில் ஈடுபடுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் உண்மையான விடயங்கள் தெரியாமல் தமது வர்த்தக நிறுவனத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாகத் தெரிவித்த சிற்றி வன்பொருள் வர்த்தக நிறுவனத்தின் உரிமையாளர், இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவுசெய்ததாகவும் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த சனிக்கிழமை (04) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் 65 வருட காலமாக கட்டிடப் பொருள் வியாபாரத்தை மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறான நிலையில், எமது நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனம் சுண்ணக் கற்களை திருகோணமலைக்கு கொண்டு செல்லும் வழியில் சாவகச்சேரியில் வைத்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் வீதியின் குறுக்காக தனது வாகனத்தை நிறுத்தி மறித்துள்ளார்.

விபத்தை ஏற்படுத்தும் வகையில் தனது வாகனத்தை எமது வாகனத்துக்கு முன்னால் பிரதான வீதியில் நிறுத்தி சாரதியை மிரட்டி வாகனத் திறப்பை வாங்கியமை சட்டத்துக்கு விரோதமான செயற்பாடு.

கல் உடைக்கும் ஆலைகள் தமது வியாபார நிலையங்களைப் பதிவு செய்துள்ளதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதி யையும் பெற்றுள்ளன. அதுமட்டுமல்லாது, கனியவளத் திணைக்களத்திலும் அனுமதி பெற்றுள்ளன.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பிலிருந்து ஜி.பி.எஸ். மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. இவ்வாறு சகல அனுமதிகளும் பெற்றவர்களிடமிருந்து நாம் கல்லை மட்டும் வாங்குகிறோம். நாம் கிடங்கு கிண்டுவதோ அல்லது கல்லை உடைப்பவர்களோ அல்லர்.

முறைப்படி அனுமதி பெற்றவர்களிடமிருந்து பணம் கொடுத்து அவர்களின் கல்லை வாங்கி திருகோணமலைக்கு கொண்டு செல்கிறோம். அதில் நாமும் சிறிய இலாபம் அடைவதோடு கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் கல் ஆலைகளை நம்பி தொழில் செய்பவர்களின் வாழ்வாதாரத்தையும் நாம் பாதுகாத்து வருகிறோம்.

இலங்கைச் சட்டத்துக்குட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் அன்றிலிருந்து இன்றுவரை இடம்பெற்று வரும் நிலையில், இதை அறியாத சிலரின் தூண்டுதலின் பேரில் எமது நிறுவனத்தையும் எமது வியாபாரத்தையும் அபகீர்த்திக்குள்ளாக்கும் வகையில் இளங்குமரன் எம்.பி. செயற்பட்டிருக்கிறார்.

அரை கனியங்களை எடுத்துச் செல்வதற்கான அனுமதி தேவையில்லை. இதை அறியாத இளங்குமரன் எம்.பி. எமது வாகனத்தை மறித்து கற்களுக்கு மேல் போடப்பட்டிருந்த பாதுகாப்பு உறையைக் கிழித்து சட்டத்தைத் தன் கையில் எடுத்துள்ளார்.

ஏற்கனவே வவுனியா பொலிஸார் எமது வாகனத்தை மறித்து நீதிமன்றத்தில் ஒப்படைத்த நிலையில், நீதிமன்றமானது சட்டத்துக்கு உட்பட்டு வர்த்தக நடவடிக்கை இடம்பெறுவதாகத் தெரிவித்து எமது வாகனத்தை விடுவித்தது.

அது மட்டுமல்லாது, கெப்பெத்திக்கொல்லாவை நீதிமன்றமும் சட்டத்துக்குட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தீர்ப்பு வழங்கியது.

வவுனியா நீதிமன்றம் மற்றும் கெப்பெத்திக்கொல்லாவ நீதிமன்றத்தில் பொலிஸார் தாக்கல் செய்த வழக்கில் சட்டத்துக்குட்பட்டு சுண்ணக்கல் எடுத்துச் செல்லப்படுவதாக நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது.

வேறு மாகாணங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எவ்வாறு கருங்கல்சல்லி மற்றும் தூள் எடுத்து வரப்படுகிறதோ அதே நடைமுறை சுண்ணக்கல்லுக்கு இருக்கிறது.

அரசாங்கம் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கூறுகின்ற நிலையில், விவசாயம் மேற்கொள்வதற்காக இரண்டு அடி ஆழம்வரை கல்லு தோண்டப்பட முடியும். ஆனால், இளங்குமரன் எம்.பி. தென்மராட்சியில் உள்ள பழைய கிடங்கொன்றைக் காட்டி நாம் புன்னாலைக்கட்டுவன் பகுதியிலிருந்து எடுத்துச்சென்ற சுண்ணக்கல்லுக்கு விளக்கம் கொடுக்கிறார். யாரோ 4 பேர் வழங்கிய தகவலை பொதுமக்கள் வழங்கிய தகவலாகத் தெரிவித்து ஊடகங்களில் தவறான செய்தியை வழங்கியுள்ளார்.

எமது நிறுவனத்தை நம்பி 100க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அதேபோல், கல்லுடைக்கும் ஆலைகளை நம்பி பரம்பரை பரம்பரையாக கல்லுடைக்கும் தொழிலை மேற்கொள்ளும் 300க்கும் மேற்பட்டவர்களின் வாழ்வாதாரத்துக்கு எம்.பி.பதில் கூறுவாரா?

அவரின் செயற்பாடு தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் வழங்கிய ஊடக செய்திகள் தொடர்பில் காங்கேசன்துறையில் அமைந்துள்ள கணினி குற்றப்பிரிவுக்கு முறைப்பாடு வழங்கவுள்ளேன்.

சட்டதிட்டங்களுக்குட்பட்டு எமது வியாபார நடவடிக்கைகள் இடம்பெற்று வரும் நிலையில், அதனைத் தடுத்து தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களை அழைத்துவந்து அவர்களுக்கு தொழில் கொடுக்கும் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் எழுகின்றது.

குறித்த விடயம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் கடற்றொழில் அமைச்சரைச் சந்திப்பதற்குச் சென்றேன். அவர் அங்கு இல்லை. எனது ஆதாரங்களை அவரது அலுவலகத்துக்கு சமர்ப்பித்தேன். அதனை ஆராய்ந்த அவரது அலுவலக உத்தியோகத்தர் அமைச்சரிடம் குறித்த விடயம் தொடர்பில் கூறினார். அதன்பின்னர் என்னுடனும் பேசினார்.

நீங்கள் சட்டத்துக்குட்பட்டுச் செய்வதைச் செய்யுங்கள் எனக் கூறினார். இது எனக்கு ஆறுதலளித்தது. ஆகவே, மாற்றத்தை விரும்பிய மக்களுக்கு ஏமாற்றத்தை வழங்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல. எனவே, தொழில் வழங்குனர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்காமல் செயற்படுமாறு பாராளுமன்ற உறுப்பினரைக் கேட்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை

## தகைமைப் பட்டியலில் 204 பேர் தெரிவு

*எம்.எஸ்.எம்.முன்தஸிர்*

இலங்கை நிர்வாக சேவையின் மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை தகைமைப் பட்டியலில் ஒன்பது சிறுபான்மையினர் உள்ளிட்ட 204 பேர் இடம்பெற்றுள்ளனர். இந்தச் சேவையில் தரம் மூன்றுக்கான ஆட்சேர்ப்புக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

இலங்கை நிர்வாக சேவை மூன்றாம் தரத்துக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2023 மற்றும் 2024 ஆண்டுகளில் நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய 204 பேர் நேர்முகப் பரீட்சைக்குத் தகைமை பெற்றுள்ளனர்.

இந்தப் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய இலங்கை நிர்வாக சேவையில் நிலவும் 155 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. திறந்த போட்டிப்பரீட்சையில் நாற்பது வீதம் அல்லது அதற்கும் அதிகமான புள்ளிகள் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகளில் 204 பேரின் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் ஆட்சேர்ப்புகான நேர்முகப்பரீட்சை இடம்பெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கான தகைமைப் பட்டியலில் விண்ணப்பதாரி ஒருவரின் பெயர் இடம்பெற்றிருப்பதும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றல் என்பனவும் குறிப்பிட்ட பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்வதாகக் கருதப்படமாட்டாதெனவும் நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவானவர்களுக்கு நேர்முகப் பரீட்சை தொடர்பான திகதி விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படு மெனவும் பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

# முச்சக்கரவண்டி - பஸ்ஸுடன் நேருக்குநேர் மோதி விபத்து

## 12 வயது சிறுவன் பலி

*அநுராதபுரம் நிருபர்*

முச்சக்கரவண்டியொன்றும் பஸ் ஒன்றும் நேருக்குநேர் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் 12 வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்துள்ளதுடன், பலத்த காயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டிச் சாரதி சிகிச்சைக்காக நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக இராஜாங்கனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் - புத்தளம் பிரதான வீதி இராஜாங்கனை பகுதியில் நேற்று முன்தினம் (05) இரவு 7.15 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

வெலிஹேன,சிலாபம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 12 வயதுச் சிறுவன் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

புத்தளம் பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியொன்று வீதியில் நின்றுகொண்டிருந்த நாயொன்றின் மீது மோதுவதைத் தடுப்பதற்காக முயற்சித்தபோது அநுராதபுரம் பகுதியிலிருந்து புத்தளம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸுடன் நேருக்குநேர் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த சிறுவனின் சடலம் நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் இராஜாங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

*அநுராதபுரம் நிருபர்*

பத்து கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேகநபரொருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலொன்றுக்கமைய தம்புத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யாய 04 பகுதியில் விசேட அதிரடிப்படையின் புத்தளம் முகாம் அதிகாரிகளினால் நேற்று முன்தினம் (05) மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே 10 கிலோ 325 கிராம் நிறையுடைய கேரள கஞ்சா அடங்கிய பொதி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் 37 வயதுடைய இராஜாங்கனைப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரையும் கேரள கஞ்சா போதைப்பொருட்களையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தம்புத்தேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர் தம்புத்தேகம நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பில் பொலிஸார் வெளியிட்டதாக போலி குரல் பதிவு

'கிளீன் ஸ்ரீலங்கா' திட்டம் தொடர்பில் பொய்யான கருத்துகளை வெளியிட்ட ஒருவரின் குரல் பதிவு சமூக ஊடகங் களில் பகிரப்படுகின்றமை குறித்து தெரியவந் துள்ளதாகப் பொலிஸார் அறிக்கை வெளியிட்டுள் ளனர்.

பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் பிரிவொன்றைக் குறிப்பிட்டு பொதுமக்கள் தமது வீட்டுக்கு முன்பாகக் காணப்படும் பகுதியை சுத்தமாக வைத்திருக்கவேண்டுமெனத் தெரிவித் தும் மேலும் பல விடயங்களை உள்ளடக்கியும் குறித்த குரல்பதிவு வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு செயற்படாதவர்களுக்கு எதிராக எதிர்வரும் 15ஆம் திகதியின் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அந்தக் குரல்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குரல்பதிவு பொய்யானதெனவும் இதனை இலங்கை பொலிஸ் வெளியிடவில்லை யெனவும் பொலிஸாரின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்தக் குரல்பதிவை வெளியிட்ட நபருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# குருநாகல் போதனா வைத்தியசாலைக்குள் நுழைய முற்பட்ட போலி வைத்தியர் கைது



குருநாகல் போதனா வைத்தியசாலைக்குள் ஸ்டெதஸ்கோப்புடன் நுழைய முற்பட்ட போலி வைத்தியரொருவர் கைதுசெய்யப்பட்டதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (05) இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர் குருநாகல் - பொத்துஹெர, ஹந்துகல பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து களனி பல்கலைக்கழகத்தின் ராகம மருத்துவ பீடத்தின் வைத்திய அடையாள அட்டை மற்றும் ஸ்டெதஸ்கோப் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயத் துறையுடன் தொடர்புடைய அரச சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடி நடவடிக்கை

## அமைச்சர் கே.டி.லால் காந்த

விவசாயத் துறையுடன் தொடர்புடைய அரச சேவை வெற்றிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, விவசாயிகள் உட்பட விவசாயத் துறை தொழில்முனைவோருக்கு உயரிய சேவை வழங்கப்படும் என்றும் விவசாயம், கால்நடை வளங்கல், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால் காந்த தெரிவித்தார்.

விசேடமாக அரசாங்கத்துடன் தொடர்புடைய, கால்நடை மருத்துவர்கள் மற்றும் வனவிலங்கு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றதனால், உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று, அண்மையில் கண்டியில் இடம்பெற்ற விவசாயத் துறை தொடர்பான முன்னேற்ற மீளாய்வு நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு



கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,விவசாயிகளைப் பாதுகாப்பதே அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாகும். அதற்காக அரசாங்கம் எப்போதும் பாடுபடும். அத்துடன், இலங்கையின் விவசாயத் துறை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

காலத்துக்குக் காலம் பல்வேறு பிரச்சினைகள் எழுந்தாலும் இந்நாட்டு மக்கள் பட்டினியில் வாடாமல் இருக்க விவசாயிகள் பாடுபட்டுள்ளனர். குறைபாடுகள் காணப்பட்டாலும் விவசாயத்துறை அதிகாரிகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

விவசாயத் துறையுடன் தொடர்புடைய இந்த வெற்றிடங்கள் மிக விரைவில் நிரப்பப்படும். நெல் சந்தைப்படுத்தல் சபை போன்ற நிறுவனங்கள் மீண்டும் செயற்படுத்தப்பட்டு பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# சிகிரியாவை மாதத்தில் 5 நாட்களுக்கு இரவு நேரத்திலும் பார்வையிட அனுமதி



சிகிரியா சுற்றுலா தலத்தைப் பார்வையிடுவதற்காக பௌர்ணமி தினங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதி வழங்க சுற்றுலா அமைச்சு தீர்மானித்துள்ளது.

பௌர்ணமி தினத்தை இலக்காகக் கொண்டு மாதமொன்றில் ஐந்து நாட்களுக்கு 'சிகிரியாவிலிருந்து நிலவு' என்ற புதிய திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, சுற்றுலாப் பயணிகள் பௌர்ணமி தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பும் பௌர்ணமி தினத்தன்றும் மற்றும் பௌர்ணமி தினத்துக்கு இரண்டு நாட்களுக்குப் பிறகும் இரவு நேரங்களில் சிகிரியாவை பார்வையிட செல்லமுடியும்.

சுற்றுலாத்துறையின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# பிரதிப் பொலிஸ் மா அதிபராகக் காட்டிக்கொண்டு வட்ஸ்அப் ஊடாக வர்த்தகர்களிடம் நிதி மோசடி

## பொரளையில் கைதானவருக்கு விளக்கமறியல்



பிரதி பொலிஸ் மா அதிபர் (DIG) எனக் காட்டிக்கொண்டு வட்ஸ்அப் ஊடாக பண மோசடியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வர்த்தகர்கள் உட்பட பலரிடம் நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார்.

பொரளையில் வசிக்கும் சந்தேக நபர், பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பெயரையும் படத்தையும் பயன்படுத்தி பல்வேறு நபர்களுக்கு வட்ஸ்அப் ஊடாக செய்திகளை அனுப்பி நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த இளைஞர், பிரதி பொலிஸ் மா அதிபர் (டி.ஐ.ஜி )எனக் கூறி தொழிலதிபர்களை அழைத்து, அவர்கள் மீது உள்ள முறைப்பாடுகளுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதாக மிரட்டி பணத்தை மோசடி செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.கைதுசெய்யப்பட்ட இளைஞன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் 09ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.








மாவனல்லை பதுரியா மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நஸீஹா ஸரூக் எழுதிய "பதுரியாவின் சுவடுகளைத் தேடி "வரலாற்று நூல் வெளியீடு கல்லூரி அதிபர் ஏ.எல்.ஏ.ரஹ்மான் தலைமையில் மாவனல்லை பிரதேச சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் நளீம் ஸாலி மற்றும் கிருங்கதெனிய, பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் பொறியியலாளர் அஸ்ஹர், கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள், ஊர் பிரமுகர்கள் மற்றும் நலன்விரும்பிகள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர் . பாரா தாஹீர் அரநாயக்க செய்தியாளர்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (06.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 178.5571 | 187.9140 |
| கனேடியன் டொலர் | 199.9354 | 208.5708 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.7199 | 41.2655 |
| யூரோ | 297.1437 | 309.5595 |
| ஜப்பான் யென் | 1.8292 | 1.9032 |
| சிங்கப்பூர் டொலர் | 209.8571 | 219.6113 |
| ஸ்ரேலிங் பவுன் | 358.7852 | 372.7436 |
| சுவிஸ் பிராங்க் | 315.5885 | 330.8627 |
| ஐ.அ. டொலர் | 289.7210 | 298.4165 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 778.6883 |
| குவைட் | குவைட் தினார் | 951.3796 |
| ஓமான் | ஓமான் ரியால் | 762.5172 |
| கட்டார் | கட்டார் ரியால் | 80.5150 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 78.1768 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.9231 |

# இரத்த தான நிகழ்வு

(கெலும் குணதிலக்க)

மெதகம பிரதேச செயலகம் ஏற்பாடு செய்துள்ள இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நாளை (08) காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை பிரதேச செயலக வளாகத்தில் நடை பெறவுள்ளது.

பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மெதகம பிரதேச செயலாளர் புபுது திசாநாயக்க தலைமையில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள் கலந்து கொண்டு ஒரு துளி ரத்தத்தை தானம் செய்து விலைமதிப்பற்ற உயிரைக் காப்பாற்றுமாறு ஏற்பாட்டுக் குழு கேட்டுக் கொள்கிறது.

# வார இறுதியில் வரும் நீண்ட விடுமுறை; பெப்ரவரி 4 வரை விசேட ரயில் சேவை

## ரயில்வே திணைக்களம் அறிவிப்பு

வார இறுதியில் வருகின்ற நீண்ட விடுமுறையை முன்னிட்டு நெரிசலைக் குறைக்கும் வகையில் மேலதிக புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் வழக்கமான நீண்ட தூர ரயில்களுடன் கூடுதலாக பின்வரும் ரயில்கள் இயக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொழும்பு, கோட்டை முதல் பதுளை வரை இரவு 07.30 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் ஜனவரி 10,12,14,17,19,24,26,31 மற்றும் பெப்ரவரி 02,04, ஆகிய தினங்களில் செயற்படும்.

பதுளை முதல் கொழும்பு கோட்டை வரை இரவு 07.40க்கு பதுளையில் இருந்து புறப்படும் ரயில் ஜனவரி 10,12,14,17,19,24,26,31 மற்றும் பெப்ரவரி 02,04 ஆகிய தினங்களில் செயற்படும்.

கொழும்பு கோட்டை முதல் காங்கேசன்துறை வரை காலை 05.30 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில் ஜனவரி 10,13,14,15,17,20,24,27,31 மற்றும் பெப்ரவரி 03,04 ஆகிய தினங்களில் செயற்படும்.

காங்கேசன்துறை முதல் கொழும்பு கோட்டை வரை பிற்பகல் 01.50 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படுகிறது. ஜனவரி 10,13,14,15,17,20,24,27,31 மற்றும் பெப்ரவரி 03,04 ஆகிய தினங்களில் செயற்படும்.





லேடி லய்ப் இன்ஸ்டிடியூட் என்ட் ஸ்கில்ஸ் நிறுவனத்தில் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அதன் பணிப்பாளர் சமீரா ரஸாக் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்த 100 இற்கும் மேற்பட்டவர்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 2024இல் கடற்படையினரால் 28 பில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல்

## 407 சந்தேக நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

இலங்கை கடற்படையினர் கடந்த வருடத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மூலம் 15.55 பில்லியன் ரூபா பெறுமதியான 622 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் 11.5 பில்லியன் ரூபா பெறுமதியான 1,211 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன வற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 700 மில்லியன் ரூபா பெறுமதியான 1,752 கிலோ கேரள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டதுடன், 23 மில்லியன் ரூபா பெறுமதியான 119 கிலோகிராம் உள்ளூர் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது. மேலும், 373 மில்லியன் ரூபா பெறுமதியான சுமார் 1.18 மில்லியன் போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளில் 28 பில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.









போதைப்பொருள் கடத்தல், மனித கடத்தல் மற்றும் பிற சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டில் உள்ள 407 நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை பொலிஸ், பொலிஸ் போதைப்பொருள் பணியகம், விசேட அதிரடிப்படை (STF), கலால் திணைக்களம் ,இந்திய கடற்படை மற்றும் மாலைத்தீவு கடலோரக் காவல்படை ஆகியவற்றின் ஒத்துழைப்பும் குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் கிடைத்துள்ளது.

இதேவேளை 21 உள்ளூர் மீன்பிடிப் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டதுடன், 230 நபர்கள் போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டனர்.

கடற்படையின் வெற்றிகரமான தேடுதல் நடவடிக்கையின் போது 226 மதுபான போத்தல்கள், 2 இலட்சத்து 34 ஆயிரத்து 670 சிகரெட்டுகள் மற்றும் 972 பாலுணர்வை தூண்டும் மருந்து மாத்திரைகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன. மேலும், நாட்டுக்கு கடத்தப்பட்ட 11 யானை முத்துக்கள் மற்றும் 4 கிலோவுக்கும் அதிகமான தங்கம் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், 14 சந்தேக நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டில் கடத்தப்பட்ட 65ஆயிரத்து 687 கிலோவுக்கும் அதிகமான பீடி இலைகள், 7,272 கிலோவுக்கும் அதிகமான காய்ந்த மஞ்சள், 368 கிலோவுக்கும் அதிகமான இஞ்சி, 8330 போத்தல்கள் - 56 ஆயிரத்து 786 விவசாய இரசாயனங்கள், 727 அழகு சாதனப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதோடு இதுனுடன் தொடர்புடைய 80 இந்தியப் பிரஜைகளும் 81 இலங்கைப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கிண்ணியா - குறிஞ்சாக்கேணி பாலத்தில் போடப்பட்டிருந்த பாதுகாப்பு வேலி இனந்தெரியாதோரால் அடித்துடைப்பு

## புதிய அரசிலாவது இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படுமா? - பொதுமக்கள் கேள்வி





**(சீனக்குடா செய்தியாளர்)**

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி பாலத்தில் பயணிகளின் பாதுகாப்புக்காக அமைக்கப் பட்டிருந்த கம்பி வேலிகளின் ஒரு பகுதி உடைத்து ஆற்றில் வீசப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை (06) அதிகாலை இனந்தெரியாதோரால், ஏற்படுத்தப் பட்டுள்ளது. 1977ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்தப் பாலம், காலாகாலமாக அரிப்புக்குள்ளாகி அண்மைக்காலமாக இடிந்து விழும் நிலையை அடைந்துள்ளது.

இந்நிலையில், புதிதாக நிர்மாணித்துத் தருமாறு மக்கள் தொடர்ச்சியாக கவனயீர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். இதன் காரணமாக, இந்தப் பாலத்தை நிர்மாணிப்பதற்காக 2021ஆம் ஆண்டு 226. 7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2021.04.22ஆம் திகதி பாலத்தின் மீள் கட்டுமானப் பணிகள் இடம்பெற்றிருந்தபோது, போக்குவரத்துக்காக தற்காலிகமாக படகொன்று போடப்பட்டிருந்தது.

இந்தப் படகு 2021.11.21ஆம் திகதி விபத்துக்குள்ளானதில் ஐந்து சிறுவர்கள் உட்பட 08 பேர் பலியான துயரமான சம்பவமொன்று அன்று இடம்பெற்றிருந்தது. எனினும், இந்தப் பாலம் இன்னும் புனரமைப்பு செய்யப்படவில்லை. இப்பாலத்தின் ஒரு பகுதியில் பயணிகளின் பாதுகாப்புக்காக இரும்புக்கம்பிகள் மாத்திரம் நடப்பட்டிருந்தன. இந்தக் கம்பிகளே இன்று இனந்தெரியாதோரால் உடைத்து ஆற்றில் வீசப்பட்டுள்ளன. ஏற்கனவே, இந்தப் பாலத்தினூடாக ஆபத்தான கட்டத்தில் பயணம் செய்த தாங்கள், மேலும் ஆபத்தை எதிர்நோக்கியிருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பற்ற இந்தப் பாலத்தினூடாக இன்னும் எவ்வளவு காலத்துக்குத்தான் பயணம் செய்வது? பொறுமை இழந்த மக்கள், ஆத்திரமடைந்தே இதனைச் செய்திருக்கிறார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். மக்கள் எவ்வளவு காலத்துக்குத்தான் பொறுமை காப்பது? புதிய அரசாங்கத்திலாவது இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படுமா? என்று மேலும் பொதுமக்கள் சிலர் கேள்வியெழுப்புகின்றனர்.

# வெறும் கஜானாவை வைத்து பொறுப்பேற்ற அரசாங்கம் வெளிநாடுகளையே நம்பி உள்ளது

## பாராளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன்





**(ஆலையடிவேம்பு செய்தியாளர்)**

''ஆட்சியில் அமர்ந்துள்ள அரசாங்கம் எப்பொழுது பலத்தை இழக்குமென்பது தெரியாமல் உள்ளது. இந்நிலையில், அரசாங்கத்தை நம்பி நாம் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். வெறும் கஜானாவை வைத்து பொறுப்பேற்ற அரசாங்கம் வெளிநாடுகளை நம்பியே உள்ளது''- என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம், ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் வருட ஆரம்ப நிகழ்வும் கருத்துப்பரிமாற்றமும் கலை நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை (05) நடைபெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் தலைவர் ஓய்வுநிலை அதிபர் பெ.தணிகாசலம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட மன்றத்தின் ஆயுட்கால தலைவர் வே.சந்திரசேகரம் உள்ளிட்ட மன்ற உறுப்பினர், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

மன்றத்தின் சுவாமி அறையில் இடம்பெற்ற பூஜைகளைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன்போது உரையாற்றிய தலைவர், கடந்த வருடத்தில் மன்றத்தில் பல்வேறு செயற்பாடுகள் தொடர்பிலும் இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் உள்ளிட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூறினார்.

இதனிடையே பலரது கருத்துப்பரிமாறல்களும் இடம்பெற்றதுடன், மாணவர்கள் உள்ளிட்ட பலரது கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. இதன்போது உரையாற்றிய கோடீஸ்வரன் எம்.பி, இந்துமாமன்றம் ஆற்றிவரும் சேவைகள் தொடர்பில் தான் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் ஆட்சியில் அமர்ந்துள்ள அரசாங்கம் எப்பொழுது பலத்தை இழக்குமென்பது தெரியாமல் உள்ளது. இந்நிலையில், அரசாங்கத்தை நம்பி நாம் எதுவும் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

வெறும் கஜானாவை வைத்து பொறுப்பேற்ற அரசாங்கம் வெளிநாடுகளை நம்பியே உள்ளது. இந்நிலையில், அனைத்து மக்களும் சமத்துவத்துடன் வாழும் சூழலை உருவாக்குவோம். இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ அமைச்சுகளை இல்லாதொழித்துவிட்டு பௌத்த கலாசார அமைச்சை தனியே உருவாக்கியுள்ளனர். இவ்வாறிருக்கையில் மத நல்லிணக்கம் எவ்வாறு பேணப்படும்.

ஆகவே அரசியலாக இருந்தாலும் எதுவாக இருந்தாலும் தமிழ் மக்கள் எப்போதும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதை மீளவும் இதன்மூலம் வலியுறுத்துவதாகக் குறிப்பிட்டார்.

# சுகாதார ஆலோசனை கருத்தரங்கு



**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு தயாரிப்பவர்களுக்கான சுகாதார ஆலோசனை கருத்தரங்கு காரைதீவு சுகாதார வைத்திய அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லிமா வஸீரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது உணவு பாதுகாப்பு தொடர்பான விளக்கங்களை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எம்.சப்னூஸ்ஸால் மேற் கொள்ளப்பட்டது. மேலும் உணவு கையாளுபவர்களுக்கான மருத்துவச் சான்றிதழும் இதன்போது வழங்கப்பட்டது.





ஏறாவூர் கிட்ஸ் கின்டர் கார்டன் பாலர் பாடசாலையின் 2024ஆம் ஆண்டுக்கான விடுகை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அறபா வித்தியாலயத்தின் அதிபர் எம்.எல்.பதியுதீன் தலைமையில் சனிக்கிழமை(04) இடம்பெற்றது. வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் கலந்துகொண்டார்.

(ஏறாவூர் மேலதிக செய்தியாளர்)



அட்டாளைச்சேனை, சம்புநகர் அல்-மினா வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (05) பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலையின் உதவி அதிபர் எம்.எச்.அப்துல் ஹை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.றஸ்மி பிரதம அதிதியாகவும் பாடசாலை மேம்பாட்டு உத்தியோகத்தரும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகருமான என்.ரீ.நஸீர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொண்டு கற்றல் உபகரணங்களை உத்தியோகபூர்வமாக வழங்கினர்.

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)





அக்கரைப்பற்று மாநகரில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயம் திறந்துவைக்கும் நிகழ்வு தேசிய மக்கள் சக்தியின் அக்கரைப்பற்று செயற்பாட்டாளர் எம்.ஐ.அபூசஹீட் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமிய அபிவிருத்தி சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ கலந்துகொண்டு திறந்துவைத்தார். இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான அபூபக்கர் ஆதம்பாவா, மஞ்சுள ரத்நாயக்க, பொத்துவில் தொகுதி தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களான றமீஸ் முஹைடீன், சுல்தான் சத்தார் மற்றும் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அக்கரைப்பற்று செய்தியாளர்)

# நன்றி நவிலலும் நினைவு மலர் வெளியீடும்



**(சம்மாந்துறை மேலதிக செய்தியாளர்)**

அண்மையில் ஏற்பட்ட பாரிய வெள்ள அனர்த்தத்தின்போது காரைதீவு - மாவடிப்பள்ளி பிரதான வீதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உழவு இயந்திரம் தடம்புரண்டு வெள்ள நீரில் மரணித்த எட்டுப் பேரின் நினைவாகவும் அவர்களின் ஜனாஸாக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வும் "சுஹாதாக் களை சுமந்த சந்தூக்குகள்" எனும் நினைவு மலர் வெளியீடும் சம்மாந்துறை அப்துல் மஜீத் நகர மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(05) இடம்பெற்றது.

சம்மாந்துறை சமத்துவ எழுச்சிக் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் மௌலவி ஏ.எம்.பௌஸ்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டச் செயலாளர் சிந்தக அபேவிக்ரம பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

ஜனாஸாக்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட 75இற்கும் மேற்பட்டவர்களுக்கு நன்றி தெரிவித்து நினைவுச் சின்னங்களும் அதிதிகளால் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எம்.எம். ஹனீபா, சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.நௌஷாத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மூத்த எழுத்தாளர் ஹனீபாவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



**(மீராவோடை செய்தியாளர்)**

ஓட்டமாவடி பிரதேசத்தைச் சேர்ந்த மூத்த எழுத்தாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

தன் வாழ்நாட்களில் மொழிக்கும் கலை இலக்கியத்துறைக்கும் அர்ப்பணிப்புமிகு சேவையாற்றிய துடன், கிழக்கு மாகாண கலை, இலக்கியத் துறைசார் செயற்பாடு களை அகில இலங்கை ரீதியிலும் சர்வதேச மட்டத்திலும் எடுத்துச் சென்றதுடன், கிழக்கு மாகாணத்தின் இளங்கலைஞர்களுக்கு முன்மாதிரி யான ஆவணமாக தன் வாழ்வை பயன்தரும் வகையில் வாழ்ந்து கலை, இலக்கியப் பணியாற்றிய கலாபூஷணம் ஹனீபாவுக்கு இவ்விருதை கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழங்கியுள்ளது.

சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயரட்னம் குணபாலன், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.பீர் முஹம்மட், வாழைச்சேனை மத்தி கலாசார உத்தியோகத்தர் எம்.எச்.எம்.நியாஸ் ஆகியோர் எழுத்தாளரின் வீட்டுக்குச் சென்று வழங்கினர்.





'உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் கந்தளாய் அல்-தாரிக் தேசிய பாடசாலையில் இரத்ததான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (05) இடம்பெற்றது. கந்தளாய் மற்றும் திருகோணமலை வைத்தியசாலைகளின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யும் பொருட்டு, கந்தளாய் அல்-புர்னி விளையாட்டுக் கழகம் மற்றும் புதிய மத்ரஸா நகர் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

(சீனக்குடா செய்தியாளர்)




திருகோணமலை, கோபாலபுரம் பிரதேசத்தில் நன்னீர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்களுக்கு Rotary club நிறுவனத்தால் வள்ளம் வழங்கும் நிகழ்வு கோபாலபுரம் மகளிர் சங்கத் தலைவி திருமதி எஸ்.நிஹாரா தலைமையில் கோபாலபுரம் பல்நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(05) இடம்பெற்றது. இந்நிகழ்வில் திருகோணமலை Rotary club கழகத் தலைவர் எஸ்.ஜெகதீஸ்வரன், திட்டப் பொறுப்பாளர் எஸ்.சிவசங்கர் உள்ளிட்ட நன்னீர் மீன்பிடிச் சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

(மீனோடைக்கட்டு செய்தியாளர்)






நிந்தவூர் பிரதேச சபையின் வழிகாட்டலின் கீழ் இயங்கிவரும் அல்-ஹிக்மா முன்பள்ளி பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா பாடசாலை மைதானத்தில் அண்மையில் (04) இடம்பெற்றது. பிரதேச சபை செயலாளர் எஸ்.ஷிஹாபுத்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான சட்டத்தரணி ஏ.எல்.றியாஸ், ஏ.அஸ்பர் உட்பட பெற்றோர் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழுவினர் கலந்துகொண்டனர். மாணவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் நோக்கில் போட்டி நிகழ்வுகளும் கலை, கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளால் நினைவுச்சின்னங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

(கோணாவத்தை செய்தியாளர்)



உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் குச்சவெளி பிரதேச சபையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி போட்டியிடுவது சம்பந்தமான கலந்துரையாடலொன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய அமைப்பாளர் எம்.எஸ்.தௌபீக் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(05) இடம்பெற்றது. குச்சவெளி பிரதேச கட்சி ஆதரவாளர்களின் பங்குபற்றுதலுடன் எதிர்காலத்தில் கட்சியால் எவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். மக்களுக்கு எவ்வாறான விதத்தில் கிராம மட்டங்களில் தெளிவூட்டல்களை நடத்த வேண்டும் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. (பதுர்தீன் சிஹானா)

# மட்டக்களப்பில் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தினூடாக மர நடுகை





**(காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)**

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் முதலாவது நிகழ்ச்சி நேற்று திங்கட்கிழமை (06) காலை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு அலுவலகம் மற்றும் பாலமீன்மடு மட்டக்களப்பு சூழல் கற்கை நிலையம் என்பவற்றின் அனுசரணையுடன் பாலமீன்மடு லைட் ஹவுஸ் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்திருந்த தூய்மைப்படுத்தல் மற்றும் மரம் நடுகை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

பாலமீன்மடு லைட் ஹவுஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.விஜயகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி என்.தயாசீலன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்ற பாலமீன்மடு பிரதேசம் முழுமையாக தூய்மைப்படுத்தப்பட்டதுடன், குறித்த வாவி, சூழல் கற்கை நிலையம் மற்றும் சூழலியல் பூங்கா அமைந்துள்ள பிரதேசம் வாவிப்பகுதிகளில் மரம் நடுகையும் இடம்பெற்றன. பாலமீன்மடு பிரதேச வைத்தியசாலை சூழலும் கிளீன் ஸ்ரீலங்கா திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அங்கும் மரங்கள் நடப்பட்டன. மரம் நடுகை மற்றும் தூய்மைப்படுத்தல் நிகழ்ச்சிகளில் தேசிய இளைஞர் கழகப் பொறுப்பாளர் என்.பிரியசகான் உட்பட பாலமீன்மடு லைட் ஹவுஸ் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள், இளைஞர் கழக உறுப்பினர்கள் பெருமளவில் பங்குகொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கந்தளாயில் பவுசர் வண்டி குடைசாய்ந்து விபத்து

## இருவருக்கு பலத்த காயம்



**(சீனக்குடா செய்தியாளர்)**

கந்தளாய், 86ஆவது மைல் பகுதியில் சீமெந்து ஏற்றிச்சென்ற பவுசரொன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளானதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று திங்கட்கிழமை (06) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருகோணமலையிலிருந்து கொழும்பு நோக்கி, சீமெந்தை ஏற்றிச்சென்ற பவுசரொன்று, முன்னால் வேகமாக வந்த காரொன்றுக்கு இடம்கொடுக்க முற்பட்டபோதே விபத்து சம்பவித்துள்ளது.

காயங்களுக்குள்ளான பவுசர் சாரதியும் அவரது உதவியாளரும் கந்தளாய் தள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்த இருவரில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# கேஸ் சிலிண்டர் திருடியவர் கைது

***(பாறுக் ஷிஹான்)***

வீடொன்றிலிருந்து சூட்சுமமான முறையில் சமையல் எரிவாயு சிலிண்டரை திருடிச்சென்ற சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அஸ்-ஸாலிஹாத் மகளிர் அறபுக் கல்லூரி பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை (05) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த சமையல் எரிவாயு சிலிண்டரை திருடியதாக சந்தேகத்தில் 21 வயதுடைய சந்தேக நபரை 24 மணித்தியாலத்தில் பொதுமக்களின் உதவியுடன் சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அத்துடன், இத்திருட்டுச் சம்பவத்தில் கைதான சம்மாந்துறை செந்நெல் கிராமம் பகுதியைச் சேர்ந்த 21 வயதான சந்தேக நபரை தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலைகளின் நடமாட்டம் அதிகரிப்பு: அவதானமாக இருக்கவும் அறிவுறுத்து!

**(சீலாமுனை செய்தியாளர்)**

அண்மையில் பெய்த வடகீழ் பருவப்பெயர்ச்சி மழையால் மட்டக்களப்பிலுள்ள குளங்களில் நீர் நிரம்பியுள்ளது. இதனால் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட படுவாங்கரைப் பெருநிலப்பரப்புக்குட்பட்ட போரதீவுப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட வெல்லாவெளிக் குளத்தில் முதலைகளின் நடமாட்டம் அதிகளவு காணப்படுவதாகவும் அதனால் அக்குளத்தைப் பயன்படுத்தும் விவசாயிகளும் மீன்பிடியில் ஈடுபடுபவர்களும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டுமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் முன்னால் அமைந்துள்ள வெல்லாவெளி குளத்தில் மாத்திரம் சுமார் 07இற்கு மேற்பட்ட முதலைகள் காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த குளத்தை அண்டியுள்ள பிரதேசத்தில் மக்கள் குடியிருப்புகள் இருப்பதால், அப்பிரதேச மக்களும் பயணம் செய்யும் பிரயாணிகளும் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

# காட்டு யானை தாக்குதலுக்குப் பயந்து ஆற்றில் குதித்த தந்தை உயிரிழப்பு

**(செங்கலடி செய்தியாளர்)**

யானையின் தாக்குதலிலிருந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஆற்றில் குதித்த குடும்பஸ்தரொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள மயிலவெட்டுவான் வீரகட்டு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மாலை (05) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மட்டக்களப்பு, மயிலவெட்டுவான், உப்போடை வீதியைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான 50 வயதுடைய கணபதிப்பிள்ளை கருணாகரன் என்பவரே உயிரிழந்துள்ளதாக குடும்பத்தினர் பொலிஸாருக்கு அடையாளம் காட்டியுள்ளனர்.

சம்பவ தினம் காலை தனது 14 வயதுடைய மகனுடன் விறகு வெட்டுவதற்காக தோணியில் வீரகட்டுமுனை பகுதிக்குச் சென்று விறகு வெட்டி வரும் வழியில் காட்டு யானை துரத்தியுள்ளது. யானை தாக்குதலுக்குப் பயந்து தகப்பனும் மகனும் ஆற்றில் பாய்ந்துள்ளனர். மகன் நீந்தி ஆற்றைக் கடந்த நிலையில், தகப்பனை ஆற்றுநீர் அடித்துச் சென்றுள்ளது. பிரதேச மக்கள் பல மணிநேரம் ஆற்றில் தேடிய நிலையில், மாலைவேளை தந்தை சடலமாக மீடக்கப்பட்டார்.

ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் கரடியனாறு பொலிஸாருடன் சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டு முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தார். கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தில் காட்டு யானைகளின் தாக்குதலால் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், வேளாண்மை உட்பட பல சொத்துகளுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஓரிரு தினங்களாக சித்தாண்டி மற்றும் வந்தாறுமூலை கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து மரங்களை சேதப்படுத்திய சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

குறித்த பகுதிகளிலுள்ள யானை வேலிகள் சேதமடைந்து காணப்படுவதனால் யானைகள் இலகுவாக கிராமங்களுக்குள் நுழைகின்றன. இது தொடர்பாக பொதுமக்கள் உரிய அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டபோதிலும் இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கை யெடுக்கப்பட வில்லை என பிரதேச மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

மாலைவேளையில் காட்டிலிருந்து வெளியாகும் யானைகள் காலையிலேயே மீண்டும் செல்கின்றன. இதனால் தமது வயல்களுக்குச் செல்பவர்கள் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்திலேயே செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி காட்டு யானைகள் ஊருக்குள் வருவதைக் கட்டுப்படுத்த நிலையான தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் கைதான இளைஞனிடம் விசாரணை

***(பாறுக் ஷிஹான்)***



ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞன் தொடர்பில் சம்மாந்துறை மற்றும் அம்பாறை விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (05) மாலை இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாங்காமம் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது சந்தேகத்துக்கிடமாக ஐஸ் போதைப்பொருளுடன் நடமாடிய 22 வயது இளைஞன் சம்மாந்துறை மற்றும் அம்பாறை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அம்பாறை மற்றும் சம்மாந்துறை விசேட அதிரடிப்படையின் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது வாங்காமம் பகுதியைச் சேர்ந்த 22 வயது மதிக்கத்தக்க சந்தேக நபர் ஐஸ் போதைப்பொருளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து ஒருதொகை ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப்பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக இறக்காமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நற்பிட்டிமுனையில் டெங்கு நோயாளர்கள் நால்வர் அடையாளம்

## சுகாதார வைத்திய அதிகாரி ரமேஷ் தெரிவிப்பு

**(நற்பிட்டிமுனை செய்தியாளர்)**

கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக் குட்பட்ட நற்பிட்டிமுனை தமிழ்ப் பிரிவில் டெங்கு நோயாளர்கள் நால்வர் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ரமேஷ் தெரிவித்தார்.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் நற்பிட்டிமுனை தமிழ் முஸ்லிம் பிரதேசங்களும் அடங்குகின்றன. இதில் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டதையடுத்து சுகாதார வைத்தியசாலை ஊழியர்கள் வீடுவீடாகச் சென்று டெங்கு பரவக் காரணமாகவுள்ள திண்மக்கழிவுகள் உள்ளனவா என்பதை ஆய்வுசெய்வதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்திருக்கா தோருக்குத் தேவையான ஆலோசனைகளை அதிகாரிகள் வழங்கவுள் ளதாகவும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் நற்பிட்டிமுனை பிரதேசத்தில் சிலர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு வைத்திய வசதிகள் மேற்கொள்ளப்பட்டதையும் நினைவுறுத் தினார். அண்மையில் பெய்த பெருமழையும் வெள்ளமுமே இதற்கான காரணமென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, நற்பிட்டிமுனை மின்சார சபை வீதியின் அருகாமையிலுள்ள வண்டு வீதிக்கருகே நீர்த்தேங்கி திண்மக்கழிவுகள் குவிந்திருந்ததைச் சுட்டிக்காட்டும் பொதுமக்கள் அதனை அகற்ற அதிகாரிகள் ஆவன செய்யவேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# காட்டு யானைகளால் பாடசாலை சுற்றுவேலி, மதில் துவம்சம்

## பிரதேசத்துக்குள் உள்நுழைவதைத் தடுக்குமாறு மக்கள் கோரிக்கை



**(குருக்கள்மடம் செய்தியாளர்)**

வெல்லாவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாய திட்டப் பகுதிக்குள் ஞாயிற்றுக்கிழமை (05) இரவு புகுந்த மூன்று காட்டு யானைகள் பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட வெள்ளிமலைப் பிள்ளையார் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் சுற்றுமதிலையும் அருகிலிருந்த பாலர் பாடசாலையொன்றின் வேலியையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளன.

போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வெல்லாவெளி பிரதேசத்தின் வேத்துச்சேனை, வெல்லாவெளி, காக்காச்சிவட்டை மற்றும் விவேகானந்த புரம் போன்ற பல கிராமங்கள் காட்டு யானைகளால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், தளவாய் காட்டை அண்மித்த காட்டுப் பகுதியில் தங்கியிருக்கும் 30க்கும் மேற்பட்ட காட்டுயானைகளால் கால்நடைகளும் பாதிப்படைவதாகவும் இப்பிரதேசத்தில் பல்வேறு மனித உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதாகவும் வனஜீவராசிகள் திணைக்களம் தினமும் யானைகளை வெடி கொளுத்தி மீண்டும் வனப்பகுதிக்குள் அனுப்பினாலும் மீண்டும் மீண்டும் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புகளுக்குள் நுழைவதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி காட்டு யானை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஒருதொகை வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் கைது

***(பாறுக் ஷிஹான்)***

வெளிநாட்டு சிகரெட்டுகளை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபரை சம்மாந்துறை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர்ப் பகுதியில் ஞாயிற்றுக் கிழமை (05) இரவு இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை சுற்றுச்சூழல் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக் கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின்போது மலையடிக்கிராமம்-02 பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருதொகை வெளிநாட்டுச் சிகரெட்டுகளுடன் கைதானார்.

இவ்வாறு கைதான சந்தேக நபரை சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். சம்மாந்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.டி.எஸ்.ஜெயலத்தின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய சுற்றுச்சூழல் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழு இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒன்லைன் வியாபாரத்தில் விரக்தியடைந்த 20 வயது இளைஞன் உயிர்மாய்ப்பு

**(பாறுக் ஷிஹான்)**

கைத்தொலைபேசியூடாக ஒன்லைன் வியாபார செயற்பாட்டில் ஈடுபட்டவர் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் சாய்ந்தமருது - 11 உடையார் வீதியில் வசித்துவந்த முஹம்மட் நயீம் முஹம்மட் நப்லான் (வயது - 20) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார். விரக்தியிலிருந்த இளைஞன் ஒருவகையான மாத்திரைகளை உட்கொண்டு கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சவளக்கடை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

உயிரிழந்த இளைஞன் சவளக்கடை பொலிஸ் பிரிவிலுள்ள அரிசி ஆலையொன்றில் கணக்காளராக பணிபுரிந்து வந்துள்ளார்.இந்நிலையில் குறித்த ஆலையில் பயன்படுத்தப்பட்ட ஒருவகை மாத்திரைகளை உட்கொண்ட நிலையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளதாக ஆரம்பகட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன், உயிரிழந்த இளைஞனின் தந்தை தனது மகன் வெளிநாட்டில் தொழில் புரிவதற்காக முன்னாயத்தங்களை மேற்கொண்டதாகவும் அதற்காக அரிசி ஆலையொன்றில் கணக்காளராக சேர்த்ததாகவும் இதன்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக இவ்வாறான ஒன்லைன் ஊடாக புதிய வகை வியாபார உத்திகள் உருவாக்கப்பட்டு கொடுக்கல், வாங்கல் இளைஞர் முதல் பல்வேறு தரப்பினரை இலக்குவைத்து செயற் படுத்தப்பட்டு வருகின்றமையும் குறித்த ஒன்லைன் வியாபாரம் சட்டவிரோதமானதெனக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும் அதில் ஆர்வம் கொண்டு பல இளைஞர்கள் இவ்வாறான பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போதை மாத்திரைகளுடன் நால்வர் கைது

**(வாழைச்சேனை செய்தியாளர்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் வாழைச்சேனை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் நால்வர் நேற்று திங்கட்கிழமை (06) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 120 போதை மாத்திரைகள், 18 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்களில் ஓட்டமாவடி பிரதேச பெண்கள் பாடசாலையொன்றின் விளையாட்டு பயிற்றுவிப்பாளரான 32 வயதுடைய ஒருவரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஏனைய மூவரும் 15 வயது மற்றும் 30, 31 வயதுகளையுடையவர்கள் என்பதுடன், நால்வரும் ஓட்டமாவடி, பிறைந்துரைச்சேனை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டவர்களையும் சான்றுப்பொருட் களையும் சட்ட நடவடிக்கைக்காக வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

**(பொலிவேரியன் செய்தியாளர்)**

சாய்ந்தமருது பிரதேச சமூக அபிவிருத்தி அமைப்பின் பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் முன்னாள் தலைவர் ஐ.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், 2025ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது. இத்தெரிவில் அமைப்பின் செயலாளராக ஏ.ஆர்.நர்மிலா தெரிவானார். தலைவராக மீண்டும் ஐ.ஜாபிர் தெரிவுசெய்யப்பட்டார்.

பொருளாளராக எம்.மஹ்தியா தெரிவானதோடு, உப தலைவராக எம்.எஸ்.எம்.அக்ரம், உபசெயலாளராக ஏ.காமிலா, அமைப்பின் ஆலோசகர்களாக எம்.ஐ.வதுர்தீன் (கப்பல் துறை அதிகாரசபை), ஏ.எல்.எம்.நூர்தீன், எம்.ஏ.சி.பாயிஸ் கரீம், ஏ.எஸ்.எம்.நௌஷாட், எம்.ஐ.சம்சுதீன்,




யூ.எல்.சத்தார் ஆகியோம் இணைப்பாளராக எம். றிபானா, அமைப்பாளராக ஏ.ஏ.கபூர், ஊடக இணைப்பாளராக எம்.ஐ.சம்சுதீன், அறிவிப்பாளராக ஏ.ஆர்.எம்.நௌபீர், கணக்காய்வாளர்களாக ஏ.அஸ்மியா, எம்.றிப்கா ஆகியோரும் ஏ.எம்.நவாஸ், ஐ.பாரிசா, ஏ.எல்.முபிதா, எம்.எம்.பாத்திமா பானு, பி.ஐ.ஹமிதா, எம்.எஸ்.ஜிப்ரியா, ஏ.ஜனுபா, ஏ.எல். றஃமான், கே.எம்.றபீக், எஸ்.எல்.ரஷீட் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# பதவி துறந்த நஜ்முல் ஹொசைன்

பங்களாதேஷ் ரி20 அணியின் தலைவரான நஜ்முல் ஹொசைன் ஷன்டோ குறித்த பதவியில் இருந்து விலகியுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. தென்னாபிரிக்க அணியுடனான தொடர் நிறைவுக்கு வந்ததன் பின்னர், இவர் தனக்கு ரி 20 அணித் தலைவர் பதவியில் விருப்பமின்மை இருப்பதை சுட்டிக்காட்டியதாக தகவல்கள் தெரிவித்திருந்த நிலையிலேயே நஜ்முல் ஹொசைன் ஷன்டோவின் பதவி விலகலும் நடைபெற்றிருக்கின்றது.

எனினும், பங்களாதேஷ் அணியினை ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் நஜ்முல் தொடர்ந்து வழிநடத்துவார் எனக் குறிப்பிடப்படுகிறது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணி புதிய ரி 20ஐ அணித்தலைவர் ஒருவரினை இன்னும் அறிவிக்காதபோதிலும் லிடன் தாஸ் குறிப்பிட்ட பதவிக்கு புதிதாக நியமனம் செய்யப்படுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

லிடன் தாஸ் தலைமையிலான பங்களாதேஷ் தரப்பு மேற்கிந்திய தீவுகள் அணியுடனான ரி 20 தொடரினை அவர்களது சொந்த மண்ணில் வைத்து 3-0 என அண்மையில் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற லெஹெக்கா, சபலென்கா





அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பிரிஸ்பேன் சர்வதேச டென்னிஸ் தொடரில் ஆடவர் பிரிவில் செக்குடியரசு வீரர் ஜிரி லெஹெக்கா மற்றும் மகளிர் பிரிவில் பெலாரசின் அரினா சபலென்கா ஆகியோர் சம்பியன் பட்டம் வென்றனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் பெலாரசின் அரினா சபலென்கா, ரஷ்யாவின் போலினா குடெர்மெடோவா உடன் மோதினார். இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 4:6 என்ற புள்ளிக்கணக்கில் சபலென்கா இழந்தார்.

இதையடுத்து, அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சபலென்கா அடுத்த இரு செட்களை 6:3, 6:2 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதன்மூலம் 4:6, 6:3, 6:2 என்ற செட் கணக்கில் போலினா குடெர்மெடோவாவை வீழ்த்தி சபலென்கா சம்பியன் பட்டம் வென்றார்.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் செக்குடியரசு வீரர் ஜிரி லெஹெக்கா, உலக தரவரிசையில் 293ஆவது இடத்தில் இருக்கும் அமெரிக்க வீரர் ரைய்லி ஒபெல்காவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் லெஹாக்கா 4:1 என்ற கணக்கில் முதல் செட்டில் முன்னிலையில் இருந்தபோது, ரைய்லி ஒபெல்கா காயம் காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதையடுத்து ஜிரி லெஹெக்கா சம்பியன் பட்டம் வென்றார்.

# லிவர்பூலுக்கு விடைகொடுக்கும் முஹமட் சலாஹ்



உதைபந்து உலகின் நட்சத்திர வீரரான எகிப்து நாட்டைச் சேர்ந்த முஹமட் சலாஹ் லிவர்பூல் அணியில் இருந்து வெளியேறுவதை உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால் சலாஹ்வின் தற்போதைய ஒப்பந்தம் பிரீமியர் லீக் சீசனின் முடிவில் காலாவதியாகும்.

மேலும், புதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பித்துள்ளதால், கிளப்பில் தனது கடைசி சீசனில் விளையாடுவதாக சலாஹ் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். பல மாதங்களாக சலாஹ்வின் முகாமில் ஒரு புதிய ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இருப்பினும், அவரும் தனது கிளப்பும் ஒரு உடன்படிக்கைக்கு வருவதற்கு இன்னும் நீண்ட தூரத்தில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், லிவர்பூலுடன் பிரீமியர் லீக்கை வெல்வதே பட்டியலில் இருந்த முதல் விடயம். கடந்த 07 அல்லது 08 ஆண்டுகளாக எனது நேர்காணல்களில் நான் எப்போதும் சம்பியன்ஸ் லீக்கை வெல்ல விரும்புகிறேன் என்று கூறுவேன். ஆனால் லிவர்பூலுடன் பிரீமியர் லீக்கை வெல்ல விரும்புகிறேன் என்று நான் கூறுவது இதுவே முதல் முறை என்றார். சலாஹ்வின் இந்த அறிவிப்பு அவரது ரசிகர்களுக்கும் லிவர்பூல் ரசிகர்களுக்கும் அதிர்ச்சியளித்துள்ளது.

# ஸ்மித்தையும் ஆஸி. அணியையும் சைகையில் கிண்டலடித்த கோஹ்லி

சிட்னியில் இடம்பெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான கடைசி டெஸ்டில் விராட் கோஹ்லி ஆஸி. அணியையும் ஸ்டீவ் ஸ்மித்தையும் கிண்டலடிக்கும் வகையில் தன்னிடம் சேண்ட் பேப்பர் (பந்தை சேதமடைய பயன்படும் மட்டை) இல்லை என்று கூறிய வீடியோ இணையத்தில் வைரலாகியுள்ளது.

குறித்த போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் 2ஆவது இன்னிங்ஸில் ஸ்டீவ் ஸ்மித் ஆட்டமிழந்தபோதே கிண்டலடிக்கப்பட்டுள்ளது. விராட் கோஹ்லி, எப்போதும் ரசிகர்களுடன் பரபரப்பான உறவைக் கொண்டிருப்பார். அந்த வகையில் இப்போட்டியில் ஸ்மித் வெளியேறிய பிறகு, விராட் கோஹ்லி தன்னிடம் சேண்ட் பேப்பர் இல்லை என்று தனது பொக்கெட்களை ரசிகர்களிடம் காண்பித்து கேலி செய்தார்.

அவரது இந்த சைகைக்கு பார்வையாளர்கள் ஆர்ப்பரித்து கூச்சலிட்டனர். இது தொடர்பான வீடியோ இணையத்தில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. கடந்த 2018ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவின் கேமரூன் பான்கிராஃப்ட், போட்டியின்போது பந்தின் வடிவத்தை மாற்றியதால் தடைகளை எதிர்கொண்டார். அவருக்கு உதவியதாக ஸ்டீவ் ஸ்மித் மற்றும் டேவிட் வார்னர் இருவருமே கிரிக்கெட்டில் இருந்து ஓர் ஆண்டு தடை செய்யப்பட்டனர். அதேபோல் கோஹ்லியின் சைகை தற்செயலாக ஸ்மித்தின் வெளியேற்றத்துக்கு பின் வந்ததால் மைதானம் ஆரவாரமானது.





# விளையாட்டுத் துளிகள்



★ இந்திய உள்ளூர் கிரிக்கெட் வீரரான சவுராஷ்டிராவை சேர்ந்த 38 வயதான ஷெல்டன் ஜாக்சன் வெள்ளைப்பந்து போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். லிஸ்ட் 'ஏ' ஒருநாள் போட்டிகளில் விளையாடி 09 சதங்கள் உட்பட 2,792 ரன்களும் 84 ரி 20 போட்டிகளில் ஒரு சதம் அடித்துள்ளார். இவர் ஐ.பி.எல். தொடரில் கொல்கத்தா மற்றும் பெங்களூர் அணிகளில் இடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



★ ஐ.சி.சியின் டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர் பும்ரா 907 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடருகிறார். இதனால், ஜஸ்பிரித் பும்ரா ஐ.சி.சி. தரவரிசை வரலாற்றில் அதிக தரவரிசை புள்ளிகள் பெற்ற இந்திய டெஸ்ட் பந்து வீச்சாளராக சாதனை படைத்துள்ளார். இதற்கு முன்னர் அஸ்வின் 2016ஆம் ஆண்டு டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் 904 புள்ளிகள் பெற்றிருந்தார். இதனை பும்ரா முறியடித்துள்ளார்.

★ அயர்லாந்து கிரிக்கெட் அணி அடுத்த மாதம் சிம்பாப்வேவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரு டெஸ்ட், 03 ஒருநாள் மற்றும் 03 ரி 20 போட்டிகள் கொண்ட தொடரில் ஆடவுள்ள நிலையில் மூன்று தொடர்களுக்குமான அயர்லாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி டெஸ்ட் அணிக்கு ஆண்ட்ரூ பால்பிர்னி தலைவராகவும் ஒருநாள் மற்றும் ரி20 அணிகளுக்கு பால் ஸ்டிர்லிங் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். டெஸ்ட் தொடர் பெப்ரவரி 6ஆம் திகதியும் ஒருநாள் தொடர் பெப்ரவரி 14ஆம் திகதியும் ரி20 தொடர் பெப்ரவரி 22ஆம் திகதியும் ஆரம்பமாகிறது.



★ 147 ஆண்டு கால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பலோ ஒன் ஆன பிறகு முதல் விக்கெட்டுக்கு அதிக ரன்கள் அமைத்த ஆரம்ப துடுப்பாட்ட ஜோடி என்ற மாபெரும் சாதனையை பாகிஸ்தானின் பாபர் அசாம் - ஷான் மசூத் படைத்தனர். அவர்கள் இருவரும் 205 ரன்கள் அடித்ததன் இதற்கு முன் தென்னாபிரிக்க ஜோடியான கிரெம் சுமித் - நீல் மெக்கன்சி - 204 ரன்கள் அடித்தனர்.

# முதல்தர கிரிக்கெட்டில் 14 ஆண்டுகளின் பின் சாதனை படைத்த இந்திய வீரர்



முதல்தர ஒருநாள் போட்டிகளில் தொடர்ந்து ஆட்டமிழக்காமல் இருந்து அதிக ரன்களை குவித்த வீரர் என்ற வரலாற்று சாதனையை தற்போது விஜய் ஹசாரே தொடரில் விளையாடிவரும் இந்தியாவின் கருண் நாயர் படைத்துள்ளார்.

லிஸ்ட் ஏ வரலாற்றில் இதற்கு முன் ஆட்டமிழக்காமல் 527 ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. நியூஸிலாந்தின் ஜேம்ஸ் ஃபிராங்கிளின் 2010ஆம் ஆண்டு இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார். 14 ஆண்டுகளுக்கு பின் அந்த சாதனையை கருண் நாயர் முறியடித்திருக்கிறார்.

இந்தியாவில் நடைபெற்றுவரும் முதல்தர ஒருநாள் கிரிக்கெட் தொடரான விஜய் ஹசாரே தொடரில் கருண் நாயர் உத்தர பிரதேச அணியுடனான போட்டியில் சதம் அடித்ததன் மூலம் இந்த தொடரில் இது அவரது 3ஆவது சதமாகும்.

அவர் இந்த தொடரில் கடைசி நான்கு போட்டிகளில் ஆட்டமிழக்காமல் இருந்துள்ளார். 5ஆவது போட்டியில் தான் ஆட்டமிழந்திருக்கிறார். இந்த தொடரில் முதல் முறையாக விக்கெட் இழக்கும்வரை அவர் மொத்தமாக 542 ரன்கள் சேர்த்து இந்த சாதனையை படைத்தார்.

**உலகின் நம்பர் 1 செஸ் வீரரும் 05 முறை உலக சம்பியனுமான கார்ல்சென் (34 வயது) சக நாட்டைச் சேர்ந்த 26 வயதான எலா விக்டோரியா மலோனை நீண்ட நாட்களாக காதலித்து வந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமணம் செய்து கொண்டார். வாழ்க்கையில் புதிய அத்தியாயத்தை தொடங்கியுள்ள அவருக்கு செஸ் வீரர்கள் மற்றும் ரசிகர்கள் தங்களது வாழ்த்துகளை தெரிவித்து வருகின்றனர்.**





# அரிசி விற்பனையிலிருந்து விலகத் தீர்மானம்

## ஐக்கிய வர்த்தகர்கள் சங்கத் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவிப்பு

எஸ்.கணேசன்

எங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளமையால் அதற்கான உரிய தீர்வை வழங்குமாறு கோரி கொட்டகலை ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் ஜனாதிபதிக்கும் வர்த்தக அமைச்சருக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்கான உரிய தீர்வு கிடைக்காவிடின் அரிசி விற்பனையிலிருந்து விலகியிருப்பதற்கு கொட்டகலை – ஐக்கிய வர்த்தகர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

கொட்டகலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐக்கிய வர்த்தகர்கள் சங்கத் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யுமாறு கொட்டகலையிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களுக்கும் நுகர்வோர் விவகார அதிகாரசபையினால் எழுத்து மூலம்



அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் சிவப்பரிசிக்கான உட்சபட்ச சில்லறை விலையாக 220 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.எனினும், எங்களுக்கு சிவப்பரிசி மற்றும் வெள்ளையரிசி ஒரு கிலோகிராம் 295 ரூபா என்ற மொத்த விலையில் புறக்கோட்டைச் சந்தையில் கிடைக்கப்பெறுகிறது. இவ்வாறான பின்னணியில் எங்களுக்கு கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யமுடியாது.

அத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் அரிசி 235 ரூபாவுக்கு மொத்த விலையில் கொள்வனவு செய்யப்படுவதுடன், போக்குவரத்து உள்ளிட்ட செலவுகளுடன் ஒப்பிடும்போது உரிய விலையில் விற்பனை செய்ய முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பண்டாரவளையில் விபத்து: மூவர் காயம்



ராமு தனராஜா

பண்டாரவளை நகரில் பொலரோ ரக கெப் வாகனமொன்று நேற்று முன்தினம் (05) 150 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் காயமடைந்ததாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை, அத்வல்லபிட்டிய பகுதியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோரே இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த மூவரும் தியத்தலாவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவகின்றனர்.

பண்டாரவளை சந்தைக்குச் சென்று அங்குள்ள ரயில் நிலையத்துக்கு முன்னாலுள்ள வீதியோரத்தில் வாகனத்தை நிறுத்த முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் சைக்கிள்- கார் நேருக்குநேர் மோதி விபத்து

மஸ்கெலியா நிருபர்





கொட்டகலை பிரதேசத்தில் குடுஓயா கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை நகரில் வீதி விபத்தொன்று நேற்றுக் காலை இடம்பெற்றதாக திம்புலபத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டகலையிலிருந்து ஹட்டன் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் ஹட்டனிலிருந்து கொட்டகலை நோக்கிப் பயணித்த காரும் நேருக்கு நேர் மோதியே இவ்விபத்து சம்பவித்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பந்தமான மேலதிக விசாரணைகளை திம்புலபத்தனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்ற புதிய வருமான வழிகளைத் தேடவேண்டும்

## முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

ஜே.எம்.ஹாபீஸ்



தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டுமாயின் புதிய வருமான வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும். இதனை மேற்கொள்ள முடியாது அரசு தடுமாறுகிறது என முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கண்டியில் வைத்து நேற்று முன்தினம் (05) அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்முன் தேர்தல் பிரசாரங்களில் பல வாக்குறுதிகளை வழங்கியது. அவ்வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமாயின் புதிய முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென ஐ.எம்.எவ். கூறுகிறது. ஆனால், புதிய முதலீட்டாளர்கள் வருவதாகத் தெரியவில்லை. காரணம், முன்னைய ஆட்சியின்போது யாராவது முதலீட்டாளர்கள் இங்கு வரும்போது அது தொடர்பாக பாரிய எதிர்ப்புகளைத் தெரிவித்தவர்கள் தற்போது ஆட்சியில் இருக்கின்றனர். இதனால் அவர்கள் முதலீடு மேற்கொள்ள அச்சப்படுகின்றனர். இதுதான் இப்போது நடந்துள்ளது.

ஒவ்வொரு கட்சிக்கும் வெவ்வேறு கோட்பாடுகள், கொள்கைகள் உள்ளன. அவற்றை நடை முறைப்படுத்த முற்படும்போது மற்றவர்களைப் பார்த்துத் துரோகிகள் என்று கூறுவது வழமையாகிவிட்டது. தாம் எதிரணியில் இருக்கும்போது எதிர்த்த விடயத்தை ஆட்சி அதிகாரம் வந்தபோது அவர்கள் அதனை மேற்கொள்ள முயற்சித்தால் அதனை எதிரணி எதிர்க்கும். இதனைப் பார்த்து துரோகி என்று கூற முடியாது''- என்றார்.







*தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கண்டி தமிழ் வர்த்தக சங்கத்தினால் கண்டி தேசிய வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவில் விசேட தைப்பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர் மொஹான் டி சில்வா, வர்த்தக சங்கத் தலைவர் பி.குமாரதாஸ், தமிழ் வர்த்தக சங்க உறுப்பினர்கள், முன்னாள் செயலாளர் எஸ்.பரமேஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இக்பால் அலி)*






*ஹட்டன் பகுதியைச் சேர்ந்த கணவனை இழந்த 100 பெண்களுக்கு பொங்கல் பானை உட்பட பொங்கலுக்குத் தேவையான பொருட்கள் ஆதியோகி யோகாரண்யமூடாக வழங்கி வைக்கப்பட்டன. ஹட்டன் டிக்கோயா முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைப்பின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அமைப்பின் நிர்வாகிகள் மற்றும் விதவைப் பெண்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.*
*(நீலமேகம் பிரசாந்த்)*

# தோட்டத் தொழிலாளர்களுக்கு கூடையுடன் குடை வழங்கி வைப்பு



ஏ.ஏ.எம்.பாயிஸ்

தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேயிலைக் கூடையுடன் குடையொன்று வழங்கும் முன்மாதிரித் திட்டமொன்று ஹொரணை தோட்டக் கம்பனியின் ஸ்டொக்ஹோம் தோட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தொழிலாளர்களை மழை, வெய்யில் பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும் இப்பாதிப்புகளால் தேயிலை உற்பத்தியில் ஏற்படும் குறைகளை நிவர்த்திசெய்யும் நோக்கமாகவும் ஒரு முன்மாதிரி முயற்சியாக இக்குடைகளை வழங்க தோட்ட நிர்வாகமும் தோட்டக் கம்பனியும் தீர்மானித்துள்ளதாக ஸ்டொக்ஹோம் தோட்ட முகாமையாளர் நதீர குணசேகர தெரிவித்தார்.

# 2016 -2019 வரை பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்களுக்குரிய தொகையை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதிக்கு மகஜர்

வட மாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பினால் 2016 -2019 வரை ஓய்வுபெற்று 01.01.2020இல் வழங்கவேண்டிய ஓய்வூதியத் தொகையை வழங்காமையால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் 300க்கும் மேற்பட்ட ஓய்வூதியர்களின் கையொப்பங்களுடன் வழங்கவேண்டிய ஓய்வூதியத் தொகையை வழங்குமாறு கோரிய மகஜர் ஒன்று ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பொது நிர்வாக சுற்றுநிருபம் இல: 3/2016 இன் பிரிவு 5.2 இற்கமைய 01. 01.2016 முதல் 31.12.2019 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு மேற்படி சுற்றுநிருபத்தின் அட்டவணை 01.இற்கமைந்த முழுமையான சம்பள


ORGANIZATION FOR PRESERVATION OF RIGHTS OF NORTHERN PROVINCE RETIRED PERSONNEL

அளவுத்திட்டத்தை 01.01.2020 முதல் வழங்குவதற்கு 11.11.2019 இல் நடைபெற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதற்கமைய 35/ 2019 இல. 10.12.2019 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

02. துரதிர்ஷ்டவசமாக 01.01.2020 முதல் கிடைக்கவிருந்த ஓய்வூதியத்தை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியானதும் 02.01.2020 இல் கூடிய அவரது முதலாவது அமைச்சரவை தற்காலிகமாக இரத்துச்செய்யத் தீர்மானித்தது. இதற்கமைய 35/ 2019(1) இல. 20/1/2020 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

03. இதன்மூலம் 01.01.2016 முதல் 31.12.2019 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு 1.1.2020இல் கிடைக்கவிருந்த ஓய்வூதிய தொகை கிடைக்காமல் போனது. இச்செயற்பாடு மேற்படி கால ஓய்வூதியர்களுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகவும் பொருளாதார ரீதியான இழப்பாகவும் அமைந்தது.

04. இதற்கெதிராக நாடளாவிய ரீதியல் பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் பல போராட்டங்களை நடத்திவந்தனர். தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இதற்கான நீதி கிடைக்குமென நம்பிக்கை கொண்டிருந்தனர். எனவே, 01.01.2025 முதல் கொண்டாவது ஓய்வூதிய கொடைப்பத்திரம் ‘திறைசேரி 79’இல் 01.01.2020 முதல் எமக்கு வழங்க உறுதியளிக்கப்பட்டிருந்த ஓய்வூதிய தொகையை வழங்குவதற்கேற்றவகையில் அமைச்சரவைத் தீர்மானத்தை மேற்கொண்டு 2025 வரவு - செலவுத்திட்டத்தில் அதற்கான நிதியை ஒதுக்கி 2016 இலிருந்து 2019 வரை ஓய்வுபெற்ற எமக்கேற்படுத்தப்பட்டுள்ள பாதிப்பை நீக்குவதற்கேற்ற நடவடிக்கைகளை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

## போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் இருவர் கைது!



சிவகுமார் திவியா

ஒருதொகை போதை மாத்திரைகளுடன் இருவரை வவுனியா விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

வவுனியா பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து யாழிலிருந்து ஹம்பாந்தோட்டை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸை வவுனியா புதிய பஸ் நிலையத்தில் வழிமறித்த பொலிஸார் அதில் சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது மறைத்து வைக்கப்பட்ட நிலையில் பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன.

அதனை உடைமையில் வைத்திருந்த தென் பகுதிகளைச் சேர்ந்த இரண்டு நபர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டு வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் பொலிஸாருக்கு முக்கிய கூட்டம் யாழில்



பு.கஜிந்தன்

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கமைவாக விபத்துகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸாரை நெறிப்படுத்தும் கூட்டமொன்று நேற்று முன்தினம் (05) காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காலிங்க ஜயசிங்க தலைமையில் இக்கூட்டம் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் மற்றும் வீதிப் போக்குவரத்துக் கடமைகளில் ஈடுபடும் போக்குவரத்துப் பொலிஸார் கலந்துகொண்டனர்.

இவர்களுக்கு யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெ.ஏ.காலிங்க ஜயசிங்கவால் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.பி.எஸ். ஜெயமகா, யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.இ.என் தில்றுக் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டனர்.

## வவுனியாவில் 41 பேருக்கு எலிக்காய்ச்சல்

சிவகுமார் திவியா

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் கடந்த 2024ஆம் ஆண்டு 41 பேர் எலிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

வவுனியா மாவட்டத்தைப் பொறுத்தவரை சிறுபோகம் மற்றும் பெரும்போகம் போன்ற நெற்செய்கைக் காலங்களில் எலிக்காய்ச்சல் தொற்று குறிப்பிட்டளவு பதிவாகியிருக்கிறது.

எனினும், 2024ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரை 41 பேர் எலிக்காய்ச்சல் நோயால் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவில் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் குணமடைந்து தற்போது வீடுகளுக்குச் சென்றுள்ளனதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு!

பு.கஜிந்தன்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தற்போது A+ (A Positive), A- (A Negative), O- (O Negative) ஆகிய இரத்த வகைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இரத்த தானம் செய்ய விரும்புவோர் மற்றும் குருதிக் கொடையாளர்கள் பருத்தித்துறை இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்த தானம் செய்துதவுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்த அவசர இரத்த தானம் வழங்குவதன் மூலம் நோயாளர்களுக்கு சிகிச்சையை சீராக வழங்க முடியுமெனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

## முழங்காவில் வைத்தியசாலையின் அம்பியூலன்ஸ் விபத்து!

பு.கஜிந்தன்

முழங்காவில் ஆதார வைத்தியசாலையிலிருந்து கிளிநொச்சி வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் (05) இரவு இரண்டு நோயாளர்களை ஏற்றிச் சென்ற முழங்காவில் வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்பியூலன்ஸ் வண்டி விபத்துக்குள்ளாகியது.

பூநகரிக்கும் பரந்தனுக்குமிடைப்பட்ட பகுதியில் நெல் மூடைகளை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரத்தின் மீது மோதியே அம்பியூலன்ஸ் விபத்துக்குள்ளாகியது. இந்நிலையில், அம்பியூலன்ஸ் வண்டியின் முன் பக்கம் மிகவும் சேதமடைந்துள்ளது.

இந்நிலையில் குறித்த நோயாளர்களை ஏற்றிச் செல்வதற்கு கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து அம்பியூலன்ஸ் வண்டி வரவழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யானையை வெட்டி குளத்தில் வீசிய இராணுவத்தினர்: மூவர் கைது!

சிவகுமார் திவியா

வவுனியா, ஓமந்தைப் பகுதியிலுள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி இறந்த யானையை துண்டுதுண்டாக வெட்டி குளத்தில் வீசியதாக மூன்று இராணுவ வீரர்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா, ஓமந்தை, கொம்புவைத்தகுளம் பகுதியிலுள்ள இராணுவ முகாமில் மின்சாரம் தாக்கி யானையொன்று கடந்த மாதம் இறந்துள்ளது. இறந்த யானையை இராணுவத்தினர் துண்டுதுண்டாக வெட்டி குளத்துக்குள் வீசியதாகவும் அதன் உடற்பாகங்கள் குளத்தில் காணப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்ததையடுத்து வன ஜீவராசிகள் திணைக்கள் மற்றும் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த விசாரணைகளையடுத்து மூன்று இராணுவ வீரர்கள் கடந்த சனிக்கிழமை (04) வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

# சீனாவின் எச்.எம்.பி.வி. வைரஸ் இந்தியாவில் தொற்று உறுதி



## பெங்களூருவில் இரு குழந்தைகளுக்கு சிகிச்சை

சீனாவில் பரவிவரும் எச்.எம்.பி.வி. வைரஸ் தொற்று இந்தியாவிலும் கண்டறியப்பட்டுள்ளது. அந்தவகையில் பெங்களூருவில் 08 மாத குழந்தைக்கும் 03 மாத குழந்தைக்கும் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆசியா முழுவதும் சீன வைரஸ் தொற்று தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சீனாவின் பல்வேறு மாகாணங்களில், எச்.எம்.பி.வி., எனப்படும் ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ் தொற்று வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகளால் சீன மருத்துவமனைகள் நிரம்பி வழிகின்றன. மருத்துவமனைகளில் மக்கள் முகக்கவசம் அணிந்தபடி சிகிச்சைக்காக காத்திருக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவிவருகின்றது.

ஹியூமன் மெட்டா நியுமோ வைரஸ் என்றழைக்கப்படும் இந்த தொற்று, நுரையீரலின் மேல் மற்றும் கீழ்ப் பகுதிகளில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. குறிப்பாக குழந்தைகள், முதியோர் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகவுள்ளோர் எளிதாக பாதிக்கப்படுகின்றனர்.

ப்ளூ (Flu) காய்ச்சல் மற்றும் இதர சுவாச தொற்றுகளின்போது ஏற்படும் அறிகுறிகளே தென்படும். இருமல், காய்ச்சல், மூக்கடைப்பு, மூச்சுவிடுவதில் சிரமம் போன்றவை பொதுவான அறிகுறிகளாகும்.

தீவிர பாதிப்புள்ளோருக்கு மூச்சுக்குழாய் அழற்சி அல்லது நிமோனியா பாதிப்பு ஏற்படக்கூடும். பாதிக்கப்படுவோர், மூன்று முதல் ஆறு நாட்கள் வரை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லா தொற்றுகளை போலவும் இருமல், தும்மலிலிருந்து வெளியேறும் நீர் துகள்களிலிருந்து மற்றவர்களுக்கு பரவுகிறது. தொற்று பாதித்தவர்களின் உடைமைகள் அல்லது கைகளை தொட்டுவிட்டு, மூக்கு, வாய்ப் பகுதியை தொடும்போது பரவுகிறது.

இவ்வைரஸ் தொற்றால் ஜப்பானில் 3000இற்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது எமது அண்டை நாடான இந்தியாவில் நேற்று (06) முதல் சீனாவின் எச்.எம்.பி.வி வைரஸ் தொற்று பெங்களூருவில் பதிவாகியுள்ளது. 08 மாதக் குழந்தைக்கு முதலில் வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து, மற்றொரு 03 மாத குழந்தைக்கும் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பெங்களூருவில் உள்ள தனியார் மருத்துவமனையில் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என கர்நாடகா மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 எனப்படும் கொரோனா தொற்று எனப்படும் கொரோனா தொற்று 2019 இறுதியில் சீனாவில் பரவத் தொடங்கிய நிலையில் அடுத்த 2 - 3 ஆண்டுகளுக்கு உலகையே ஸ்தம்பிக்க செய்தது. அந்த பாதிப்பினால் வீழ்ந்த சர்வதேச பொருளாதாரம், இப்போது தான் மெல்ல சுதாரித்து எழத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்சித் தலைமை பதவியை துறக்கிறார் கனடா பிரதமர்



கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ (Justin Trudeau), லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து பதவி விலகவிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச அரங்கில் பல்வேறு நெருக்கடிகளை சந்தித்து வரும் கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, உள்நாட்டிலும் பிரச்சினைகளை சந்தித்து வருகிறார். ட்ரூடோ பதவி விலக வேண்டும் என்று அவரது சொந்த கட்சியான லிபரல் கட்சி எம்.பிக்களே போர்க்கொடி தூக்கி வருகின்றனர். இவர் மீண்டும் கனடா தேர்தலில் போட்டியிடக்கூடாது என்றும் வலியுறுத்தி வருகின்றனர்.

அதுமட்டுமல்லாமல், ட்ரூடோவை கட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, வேறொருவரை நியமிப்பது குறித்தும் ஆலோசித்து வருகின்றனர். மேலும், ட்ரூடோவின் அரசுக்கு ஆதரவு கொடுத்து வந்த என்.டி.பி., கட்சியும் ஆதரவை விலக்கிக் கொண்டது. மேலும், அடுத்த பாராளுமன்ற கூட்டத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அழைப்பு விடுத்தது.

இந்நிலையில், பிரதமர் ட்ரூடோ, லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து இன்றோ நாளையோ விலக இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இது உறுதிப்படுத்தப்படாத நிலையில், நாளை (08) கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டம் கூடுகிறது. அதற்குள் அவர் பதவி விலகவிருப்பது மட்டும் உறுதியாகியுள்ளது. புதிய தலைவர் தெரிவுசெய்யப்படும் வரையில் அவர் பிரதமர் பதவியில் நீடிப்பார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மெலோனியுடன் திரைப்படம் பார்த்து மகிழ்ந்த ட்ரம்ப்



அமெரிக்க ஜனாதிபதியாக எதிர்வரும் 20ஆம் திகதி பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்பை, இத்தாலி பிரதமர் ஜோர்ஜியா மெலோனி (Giorgia meloni), சந்தித்துப் பேசினார். அப்போது இருவரும் சினிமா பார்த்தபடி, இரவு விருந்தில் பங்கேற்றனர்.

அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக குடியரசுக் கட்சியின் டொனால்ட் ட்ரம்ப், எதிர்வரும் 20ஆம் திகதி பதவியேற்கவுள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் அவர் வென்ற பின்னர், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஹங்கேரி பிரதமர் விக்டோர் ஓர்பான் உள்ளிட்டோர் சந்தித்தனர்.

அந்த வகையில், ஐரோப்பிய நாடான இத்தாலியின் பிரதமர் ஜோர்ஜியா மெலோனி, ட்ரம்பை அவருடைய மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். மிகச் சிறந்த பெண் என, மெலோனியை ட்ரம்ப் பாராட்டினார்.

பின்னர், 2020 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்புக்கு ஆதரவாக செயற்பட்ட ஒரு வழக்கறிஞர் தொடர்பான ஆவனப் படத்தை பார்த்தபடி, இருவரும் இரவு விருந்தில் பங்கேற்றனர். தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், அடுத்த சில நாட்களில் இத்தாலியின் ரோம் நகருக்கு செல்லவுள்ளார். அப்போது, மெலோனியை சந்தித்து பேசவுள்ளார். இந்நிலையில், தனிப்பட்ட முறையில் அமெரிக்கா சென்ற மெலோனி, ட்ரம்பை சந்தித்துள்ளார்.

# சக மானை கொன்ற சிறுத்தை அதிர்ச்சியில் உயிர்விட்ட அரிய வகை மான் கூட்டம்!

சக மான் ஒன்றை சிறுத்தை தாக்கிக் கொன்றதை நேரில் கண்ட ப்ளெக்பக் (Blackbuck) வகையைச் சேர்ந்த ஏழு மான்கள் அதிர்ச்சியில் உயிர்விட்ட சம்பவம், வனவிலங்கு ஆர்வலர்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம் கெவாடியாவிலுள்ள ஒற்றுமை சிலை அருகே ஜங்கிள் சபாரி வனவிலங்கு பூங்காவிலே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஏராளமான மான்கள், பறவைகள் உள்ள இந்த பூங்கா மிக முக்கியமான சுற்றுலாத் தலமாகவும் விளங்கி வருகின்றது. இங்கு ஜனவரி 01ஆம் திகதி சக மான் ஒன்றை சிறுத்தை தாக்கிக் கொன்றதை நேரில் கண்ட ப்ளெக்பக் வகையைச் சேர்ந்த ஏழு மான்கள் அதிர்ச்சியில் உயிரிழந்தன. இதுபோன்று சம்பவம் நடப்பது முதல் முறை என வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து காடுகளின் துணைப் பாதுகாவலர் அக்னீஸ்வர் வியாஸ் தெரிவிக்கையில்,

''கெவாடியாவைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகள் சிறுத்தைகளின் இருப்பிடமாக உள்ளன. பெரும்பாலும் இரவு நேரத்தில் அதிகமாக நடமாடுகின்றன. ஆனால் இதுவரை வேலியைத் தாண்டி பூங்காவுக்குள் சிறுத்தைகள் வந்ததில்லை. தற்போது முதல்முறையாக பூங்காவுக்குள் நுழைந்து பீதியை ஏற்படுத்தியுள்ளது. பணியிலிருந்த பாதுகாவலர்கள் விரட்ட முயற்சித்தனர். எனினும், சிறுத்தை பிளெக்பக் வகை மானொன்றை கொன்றது. இந்த அதிர்ச்சியில் மேலும் ஏழு மான்கள் உயிரிழந்துள்ளன. பூங்கா 24 மணி நேரமும் சி.சி.டி.வி. கெமரா உதவியுடன் கண்காணிக்கப்படுகிறது. இச்சம்பவம் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது'' - எனத் தெரிவித்துள்ளார்.




# ஹிலாரி உட்பட 19 பேருக்கு 'மெடல் ஒவ் பிரீடம்' விருது



அமெரிக்காவின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், தொழிலதிபர் ஜோர்ஜ் சோரஸ் மற்றும் ஹொலிவூட் நடிகர் டென்சில் வொஷிங்டன் உட்பட 19 பேருக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அமெரிக்காவின் மிகவும் உயரிய சிவிலியன் விருதான, 'மெடல் ஒவ் பிரீடம்' எனப்படும் 'சுதந்திர விருது' நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டது.

அரசியல், விளையாட்டு மற்றும் கலை என பல துறைகளில் சிறந்த சேவையாற்றியோருக்கு, இந்த விருது அமெரிக்க ஜனாதிபதியால் வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருதை, ஜனாதிபதி பதவியிலிருந்து விரைவில் விலகவிருக்கும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த ஜோ பைடன் சனிக்கிழமை (04) வழங்கி வைத்தார்.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டன், தொழிலதிபர் ஜோர்ஜ் சோரஸ், ஹொலிவூட் நடிகர்களான மைக்கேல் பொக்ஸ், டென்சில் வொஷிங்டன் மற்றும் உதைபந்தாட்ட வீரர் லியோனல் மெஸ்ஸி உட்பட 19 பேருக்கு அந்நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதேவேளை, உதைபந்தாட்ட நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸிக்கும் இந்தப் பதக்கம் அறிவிக்கப்பட்டது. ஆனால், நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான திட்டமிடலில் ஏற்பட்ட சிக்கலால், அவரால் நேரில் பதக்கத்தைப் பெற முடியவில்லை.

**ஜோர்ஜ் சோரஸுக்கு விருது வழங்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்பு**

இந்நிலையில் ஹங்கேரியில் பிறந்து, அமெரிக்காவில் வளர்ந்த பிரபல தொழிலதிபர் ஜோர்ஜ் சோரஸுக்கும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. அவருடைய சார்பில் அவரது மகன் விருதைப் பெற்றுக் கொண்டார்.

ஜோர்ஜ் சோரஸுக்கு விருது வழங்கப்பட்டதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பிரபல தொழிலதிபர், குடியரசு கட்சி ஆதரவாளர் எலான் மஸ்க், இதை கேலிக்குரிய நடவடிக்கை என்று விமர்சித்துள்ளார்.

தனது, 'ஓபன் சொசைட்டி பவுண்டேஷன்' அறக்கட்டளை வாயிலாக, உலகின் பல நாடுகளுக்கும் ஜோர்ஜ் சோரஸ் நன்கொடை வழங்கி வருகிறார். ஜனநாயக நடவடிக்கைகளுக்கான நிதி என்ற பெயரில், அந்த நாடுகளின் தேர்தல் நடைமுறைகளில் அவர் தலையிடுவதாக நீண்ட காலமாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அமெரிக்காவிலுள்ள குடியரசு கட்சி, ஜோர்ஜ் சோரஸை தொடர்ந்து விமர்சித்து வருகிறது.

இந்நிலையில் பைடன் இன்னும் சில நாட்களில் பதவி விலகவுள்ள நிலையில், 'சுதந்திர விருது'களை கடைசி முறையாக ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கியுள்ளார். எதிர்வரும் 20ஆம் திகதி அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி யேற்கவுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# விலைபோன ப்ளூஃபின் டூனா



உலகின் அதிக சுவை மற்றும் அதிக விலை உள்ள மீன்களில் சூரை மீனுக்கு முக்கிய இடம் உண்டு. அந்தவகையில் புத்தாண்டையொட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலுள்ள பிரபல மீன் சந்தையில் ப்ளூஃபின் டூனா (Tuna) எனப்படும் சூரை மீன் ஏலமிடப்பட்டது. 276 கிலோ எடை கொண்ட இந்த மீன் 207 மில்லியன் யென்னுக்கு ($1.3 million) விற்பனையாகியுள்ளது.

ஜப்பானின் பிரபல உணவகமொன்று இந்த மீனை அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளது.

உலகிலேயே மிக சுவையான மீனினமாக அறியப்படும் டூனா மீன்கள், பசுபிக் கடலில் அதிகம் கிடைக்கும். இந்த மீன் ருசிக்கு ஜப்பானியர்கள் அடிமை. அதிலும் ப்ளூஃபின் டூனா இன்னும் சுவை அதிகமாம். இதற்கு முன்னர் இதே சந்தையில் 2019இல் ஒரே நாளில் 26 கோடிக்கு நீல சூரைமீன் விற்பனையாகி சாதனை படைத்திருந்த நிலையில் தற்போது ஒரே மீன் அதிக விலைக்கு விற்பனையாகி புதிய சாதனை படைத்துள்ளது.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7